விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 20 வியாழக்கிழமை (04.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 075


## இரணைதீவில் சடலத்தை அடக்கம் செய்வதை எதிர்த்து கவனயீர்ப்புப் போராட்டம்




03

## மூன்று பிள்ளைகளுடன் கிணற்றில் குதித்த தாய்

### கிளிநொச்சி வட்டக்கச்சியில் துயரம்
### தாய் மட்டும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி - வட்டக்கச்சி ஒற்றைக்கை பிள்ளையார் கோவிலடி பகுதியில் தனது மூன்று பிள்ளைகளையும் அணைத்துக் கொண்டு தாயார் ஒருவர் கிணற்றுக்குள் குதித்த நிலையில் அவர் மட்டும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## இரணைதீவு விவகாரம் சஜித் அணியும் எதிர்ப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழப்போரின் சடலங்களை இரணைதீவில் அடக்கம் செய்யும் முயற்சிக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர திஸ்ஸ அத்தநாயக்க எதிர்பபு வெளியிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரி 19

## மனித உரிமை மீறல் தொடர்பில்
# தப்பிச் செல்லாமல் தீர்வு காணுங்கள்



### ராஜபக்ஷ அரசிடம் ஐ.தே.க கோரிக்கை

(கொழும்பு)

மனித உரிமை மீறல் தொடர்பில் ராஜபக்ஷ அரசாங்கம் தப்பிச் செல்லாமல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என ஐ.தே.கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஐ.தே.க முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் நேற்று 3 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணப் பல் கலைக்கழக ஆய்வு 19

## வவுனியாவில் இராணுவம் துப்பாக்கிச் சூடு இருவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா ஓமந்தை பகுதியில் இராணுவத்தின் துப்பாக்கி சூட்டிற்கு இலக்காகி இரண்டு 19

## இந்திய விசா சேவைகள் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

கோவிட்-19 பெருந்தொற்றுக் காரணமாக 2020 மார்ச் 13ஆம் 19

## தீக்காயத்துக்குள்ளான குடும்பப் பெண் மரணம்

### குப்பைக்கு தீ வைக்கும்போது மயங்கி விழுந்ததில் விபரீதம்

(யாழ்ப்பாணம்)

குப்பைக்கு தீ வைக்கும்போது மயங்கி விழுந்து தீக்காயத்துக்குள்ளான குடும்ப பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். 19

## இரு நாட்களுக்கு முன்னர் கொரோனா தடுப்பூசி ஏற்றிய இருவர் மரணம்

### தீவிர விசாரணையில் சுகாதார அமைச்சு

(கொழும்பு)

இரண்டு நாட்களுக்கு முன்னர் கொரோனாத் தடுப்பூசி ஏற்றிக் கொண்ட இருவர் மரணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு உறுதி செய்துள்ளது. மேலும் இது குறித்து விசாரணைகள் இடம் பெறுவதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்திருக்கின்றது.

தடுப்பூசியை பயன்படுத்திய இருவர் இரண்டு நாட்களின்பின்னர் உயிரிழந்துள்ளனர் என 19

## வட மாகாண சுகாதாரத் தொண்டர்கள் ஆளுநர் செயலகத்துக்கு முன் கவனயீர்ப்புப் போராட்டம்



19

## கொரோனா மேலும் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் ஒருவர் நேற்று உயிரி 19

## சிறுநீரகம் தேவை

44 வயது நபருக்கு O+ குருதி வகை உடைய சிறுநீரகம் தேவை.
( சன்மானம் வழுங்கப்படும்.) (C-1590)

**076 395 6263, 076 877 3780**

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## பெண் உதவியாளர் தேவை

புலோலியில் வசிக்கும் வயோதிப மாது ஒருவரை இரவு நேரத்தில் பராமரிப்பதற்கு அல்லது இரவும் பகலும் பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் தேவை. (C-1592)


**077 651 0227**

## காணி விற்பனை

உரும்பிராய், பொக்கணை வீதியில் முருகன் கோவில் முன்பாக 6 பரப்புக் காணி விற்பனைக்கு.
இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
( பலாலி வீதியிலிருந்து 500மீ. தூரம். )
தரகர் தேவையில்லை. (6014)

**077 623 4204, 077 505 8561**


## கண்ணீர் அஞ்சலி



யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர்; மருத்துவர்
**த. சத்தியமூர்த்தி**
அவர்களின் அன்புத் தந்தை

அமரர்
**பி. தங்கமுத்து**

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 27.09.1934
உதிர்வு 01.03.2021

(C-1591)

வியாவில் ஐயனார் கோவில்
தேவஸ்தானம் - காரைநகர்

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
**சிதம்பரப்பிள்ளை கங்காதரன்**
( சமுர்த்தி முகாமையாளர் )

யாழ். சிற்றி லயன்ஸ் கழக உறுப்பினர் லயன் கமல்ராஜ் அவர்களின் அன்புத் தந்தையார் சிவபதம் அடைந்ததையிட்டு அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மண்ணில் 25.10.1964
விண்ணில் 02.03.2021

யாழ். சிற்றி லயன்ஸ் கழகம்
யாழ்ப்பாணம் (C-1593)

## யாழ்ப்பாணம் மாநகர சபை

**முனீஸ்வரன் வீதி, நெடுந்தூர பேருந்து நிலையம் மற்றும் மாநகர சபையினால் நிர்வகிக்கப்படும் சந்தைகளின் பராமரிப்பிற்கான கூறுவிலை கோருதல்**

1. **யாழ்ப்பாண மாநகர சபை, பெறுகைக்குழு தலைவர்** நெடுந்தூர பேருந்து நிலையம் மற்றும் கீழ்க் காட்டப்பட்டுள்ள சந்தைகளின் பராமரிப்பிற்காக தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரிடமிருந்து கேள்விகளைக் கோருகின்றார்.
   - நவீன சந்தை
   - நாவாந்துறைச் சந்தை
   - குருநகர்ச் சந்தை
   - செங்குந்தாச் சந்தை
   - பாசையூர்ச் சந்தை
2. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தங்கள் சேவை முன் அனுபவம், ஆளணி என்பவற்றை உறுதிப்படுத்தும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள சேவை வழங்குனர்கள் இது தொடர்பான மேலதிக விபரங்களை 021 222 8874, 021 222 2334 எனும் தொலைபேசியூடாகவோ mcjaffnamailt@yahoo.com எனும் மின்னஞ்சல் ஊடாகவோ பெற்றுக் கொள்ள முடியும்.
4. ஒவ்வொரு கேள்விதாரரும் நெடுந்தூர பேருந்து நிலையம் மற்றும் ஒவ்வொரு சந்தைக்குமான பராமரிப்புச் செலவை தனித்தனியாக சமர்ப்பிக்க வேண்டும்.
5. நெடுந்தூர பேருந்து நிலையம் மற்றும் ஒவ்வொரு சந்தைக்கும் தனித்தனியாக கேள்விப் படிவத்தை 08.03.2021 ஆம் திகதி முதல் படிவமொன்றிற்கு கட்டணமாக ரூபா 500.00 இனைச் செலுத்தி வேலைப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.
6. நெடுந்தூர பேருந்து நிலையம் மற்றும் ஒவ்வொரு சந்தைக்கும் தனித்தனியாக கேள்விப் படிவத்துடன் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணமாக ரூபா 20,000.00 இனையும் செலுத்துதல் வேண்டும்.
7. தாங்கள் கேள்வியில் சித்திதாரராகும் பட்சத்தில் தங்களது ஒப்பந்தத் தொகையின் 5% இனை வங்கி பிணைமுறியாக சமர்ப்பித்தல் வேண்டும்.
8. கேள்விப் படிவங்கள் 22.03.2021ஆம் திகதி மாலை 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே பிற்பகல் 2.30 மணிக்கு கேள்வி திறக்கப்படும்.
9. கேள்விச் சபையானது எந்தவொரு கேள்வியையும் நிராகரிக்கும் உரிமை கொண்டதாகும்.

**தலைவர்,**
பெறுகைக்குழு,
மாநகர சபை,
யாழ்ப்பாணம். (C-1588) 03.03.2021

## மரண அறிவித்தல்



### மாணிக்கம் விஜயரத்தினம்

பிறப்பு - 1938.02.05
இறப்பு - 2021.03.03

ஒதியாவளவு, பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் கரகத் தாம்புலம் கொற்றாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் விஜயரத்தினம் நேற்று (03.03.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சதாசிவம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கனகரத்தினத்தின் அன்புக் கணவரும் ஜெயசேகரன், கௌரி, காலஞ்சென்ற சுமதி, மாலதி, ஜெயமோகன் (மக்கள் வங்கி, சாவகச்சேரி கிளை பிரதி முகாமையாளர்), நந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரோகினி, வரதன், யோகநாதன், சுவேந்தினி, தர்மதேவன் (ஆசிரியர் - உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி ) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சபீனா, கீர்த்தனா, கௌதம், ஜெனிக்ஷன், நொய்மி, ரெரன்ஸ், தனு, விதுசிகா, விஸ்னுப்பிரியன், வேனுயன், தரங்கினி, ராகவி ஆகியோரின் அன்புப் பேரனும் லியோரா, யாகிர் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.03.2021) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-1589)

கரகத்தாம்புலம்,
கொற்றாவத்தை.

தகவல்:-
வி.ஜெயமோகன்
(மகன்)

# இரணைதீவில் கொரோனா சடலங்களை அடக்கம் செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து கவனயீர்ப்புப் போராட்டம்

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி- இரணைதீவில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**








இந்தப் போராட்டம் நேற்று புதன்கிழமை காலை 09 மணியளவில் இரணைமாதா நகர் இறங்குதுறையில் ஆரம்பமாகியது.

இரணைதீவு மக்களும் கிராம மட்ட அமைப்புக்கள் மற்றும் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தினரும் இணைந்து ஏற்பாடு செய்த குறித்த போராட்டத்தில் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் மதகுருமார்களும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

கொவிட் 19 தொற்றினால் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்வதற்கான இடமாக இரணைதீவு பகுதியை தெரிவு செய்துள்ளதாக நேற்று முன்தினம் அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருந்தார்.

குறித்த தீர்மானம் சிறுபான்மையின மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ள நிலையில்,

குறித்த பிரதேசத்தில் வாழும் மக்கள் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டனர். இறுதியில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மகஜர்களும் அனுப்பிவைக்கப்பட்டன.

(நி-4-84-315-285-316)

## கொரோனா சடலங்களை இரணைதீவில் அடக்கம் செய்வதென்பது தற்காலிகமானதாம்

### சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(கொழும்பு)

கொரோனா வைரஸினால் உயிரிழந்தவர்களது சடலங்களை இரணைதீவில் அடக்கம் செய்வதாக எடுக்கப்பட்ட தீர்மானம் தற்காலிகமானதே என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

மாகாண சபைகளின் பொதுச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், மாகாண மற்றும் பிரதேச சுகாதார இயக்குநர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் அடங்கிய குழு, அந்தந்த மாகாணங்களிலிருந்து கொரோனா வைரஸினால் உயிரிழந்தவர்களது சடலங்களை அடக்கம் செய்ய பொருத்தமான இடத்தை தீர்மானிக்கும் வரை இந்த முடிவு தற்காலிகமாக இருக்கும் என்று அவர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.


மேலும் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்வது தொடர்பான வழிகாட்டுதல்கள் இறுதி செய்யப்பட்டு அதற்கான சுற்றறிக்கை வெளியிடப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அடக்கம் செய்வதற்கான அனைத்து செலவுகளும் அரசாங்கத்தால் ஏற்கப்படும் என்றும் சடலங்கள் கொழும்பு மற்றும் வெலிகந்த மருத்துவமனை போன்ற இரு இடங்களிலிருந்து தீவுக்கு கொண்டு செல்லப்படும் என்றும் அவர் கூறினார்.

கொரோனாவால் உயிரிழந்த ஒருவருக்கு இரண்டு உறவினர்கள் இறுதிச் சடங்குகளுக்கு தீவுக்கு செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்றும் இறுதி சடங்குகள் சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரி அல்லது பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளின் மேற்பார்வையில் நடைபெறும் என்றும் தெரிவித்தார். (நி-4)

## இரணைதீவு விவகாரம் அரசின் முடிவை ஏற்க முடியாது

(யாழ்ப்பாணம்)



இரணைதீவு விவகாரம் தொடர்பில் அரசின் தீர்மானம் நியாயப்படுத்தவோ ஏற்றுக் கொள்ளவோ முடியாததொன்றாகும் என தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று அனுப்பி வைத்த அறிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது,

தங்களது வாழ்வாதாரத்தை முற்றிலுமாக இழந்தவர்கள் இரணைதீவு மக்கள்.

இந்த நிலையில் அவர்களை மேலும் பீதிக்குள்ளாக்கும் நிலைமையே சடலங்களை அடக்கம் செய்ய இரணைதீவை தெரிந்தெடுத்த நடவடிக்கையாகும்.

இஸ்லாமிய சகோதரர்கள் செறிந்து வாழுகின்ற இடங்களில் வெற்றிடமாக பல ஏக்கர் காணிகள் இருக்கும் போது, முஸ்லிம் அமைப்புகளுடன் இது பற்றி கலந்து ஆலோசிக்காமல் இரணதீவை தேர்ந்தெடுத்தது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளவோ, நியாயப்படுத்தவோ முடியாத செயலாகும்.

அவசரமாக எடுத்த இந்த முடிவு நாட்டின் இனங்களுக்கான விரிசலை ஏற்படுத்துவதற்கு வழிவகுத்துவிடும். இரணைதீவு கடல் சூழ்ந்த பகுதி என்பதால், மழைக் காலங்களில் உடல்கள் மேலும் பாதிப்படைவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

ஏதோ ஒரு காரணத்திற்காக அரசு இந்த முடிவை எடுத்திருந்தால், இந்தத் தீர்மானம் முற்றிலுமாக அதற்கு முரண்பாடாகவே தோன்றுகின்றது.

மேலும் அம்மக்கள் நிலத்தடி நீரையே நம்பி வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆகவே அரசு இவ்விடயத்தில் முஸ்லிம் அமைப்புகளுடன் கலந்தாலோசித்து இரணைதீவை தவிர்த்து பொருத்தமான வேறொரு இடத்தை தெரிவு செய்ய வேண்டும் என அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

## மார்ச் 7 ஆம் திகதி இலங்கைக்கு மேலும் 264,000 தடுப்பூசிகள்


(கொழும்பு)

கொவிட் கட்டுப்பாட்டிற்கான உலக சுகாதார அமைப்பின் கோவெக்ஸ் திட்டத்தின் கீழ் 2 இலட்சத்து 64 ஆயிரம் தடுப்பூசி டொஸ்கள் மார்ச் 7 ஆம் திகதி இலங்கையை வந்தடையும் என ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

கோவெக்ஸ் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கும் முதல் தொகுதி தடுப்பூசிகள் இதுவாகும்.

தடுப்பூசி செலுத்தப்படுவதில் உலகின் முதல் நாடுகளில் இலங்கை ஒன்று என்பது மகிழ்ச்சி அளிப்பதாகவும் இலங்கையில் தடுப்பூசி போடுவதைத் தொடங்குவதற்கான ஜனாதிபதியின் தலைமைத்துவ உறுதிப்பாட்டுக்கும் அவர் பாராட்டுக்களை தெரிவித்தார். (நி-4)

# கிராமிய விளையாட்டு மைதானங்களுக்கான அபிவிருத்திப் பணிகள் ஆரம்பம்



நாடு முழுவதிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட கிராமிய விளையாட்டு மைதானங்கள் 332 இற்கான அபிவிருத்திப் பணிகள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று முன்தினம் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டதாக கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் ரவிந்திர சமரவிக்ரம தெரிவித்தார்.

நாட்டைக் கட்டி எழுப்பும் ஒளிமயமான நோக்குடன் அரசாங்கத்தின் கொள்கை திட்டத்திற்கு அமைவாக சக்திமிக்க தலைமுறையினரை உருவாக்குவதன் தேசிய பொறுப்பை நடைமுறைப்படுத்துவதற்கு இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு, கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு ஒன்றிணைந்து கிராமிய விளையாட்டு மைதானங்களுக்கான அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஒரு செயலகப் பிரிவிலிருந்து ஒரு மைதானத்தை தெரிவு செய்துள்ளதுடன், ஒரு மைதானத்துக்காக 15 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதன் படி, நாடு முழுவதிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட 332 கிராமிய மைதான அபிவிருத்திப் பணிகளுக்காக 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீடானது மாவட்ட செயலாளர் ஊடாக பிரதேச செயலகங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன், குறித்த வேலைத்திட்டமானது உள்ளூராட்சி மன்றங்கள் மூலமாக செயற்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# மைதான அபிவிருத்தி அங்குரார்ப்பண நிகழ்வு

நாடளாவிய ரீதியாக கிராமிய விளையாட்டு மைதானங்களை அமைக்கும் திட்டத்தின் ஊடாக தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வரணி-நவா விளையாட்டுக் கழக மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்கான அங்குரார்பண நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது.

நவா சனசமூக நிலையம் மற்றும் விளையாட்டுக் கழக நிர்வாகத்தின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டு மைதான அபிவிருத்திக்கான அடிக்கல்லை நாட்டி வேலைத் திட்டத்தை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்திருந்தார்.


மேலும் நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் உஷா சுபலிங்கம், தென்மராட்சி பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரிகள், விளையாட்டு உத்தியோகத்தர், இடைக்குறிச்சி கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி அலுவலர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (4-30)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.


**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**





இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு நேற்று முன்தினம் கிராமப்புற மற்றும் விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு அமைச்சகத்தின் ஒத்துழைப்புடன் ‘கமட பிட்டியக்' தேசியத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இதன் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று அலரி மாளிகையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

# தடுப்பூசி போட்டார் ரவிசாஸ்திரி



இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளரான ரவிசாஸ்திரி குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் முதல் டோஸ் கொரோனாத் தடுப்பூசியை போட்டுக் கொண்டார்.

இந்தியாவில் கொரோனா தடுப்பூசி போடும் பணி கடந்த ஜனவரி 16 ஆம் திகதி தொடங்கி நடந்து வருகிறது. இதன் 2 ஆவது கட்டமாக 60 வயதை எட்டிய அனைவருக்கும் இணை நோய்களைக் கொண்ட 45 வயதைக் கடந்தவர்களுக்கும் கடந்த திங்கட்கிழமை முதல் கொரோனாத் தடுப்பூசி போடப்படும் என்று மத்திய அரசு அறிவித்ததை தொடர்ந்து மேற்கொண்ட பிரிவினருக்கு கொரோனாத் தடுப்பூசி போடும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளரான 58 வயது ரவிசாஸ்திரி குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் நேற்று முன்தினம் முதல் டோஸ் கொரோனாத் தடுப்பூசியைப் போட்டுக் கொண்டார். (4)

# கட்டார் ஓபன் டென்னிஸ் சானியா ஜோடி வெற்றி



கட்டார் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டியில் சானியா ஜோடி லூட்மைலா கிச்செனோக் இணையை தோற்கடித்து கால் இறுதிக்குள் நுழைந்தது.

கட்டார் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி டோகாவில் நடந்து வருகிறது.

ஓராண்டுக்கு பிறகு இந்த போட்டியின் மூலம் மீண்டும் சர்வதேச டென்னிசுக்கு திரும்பிய இந்திய வீராங்கனை சானியா மிர்சா, சுலோவேனியா வீராங்கனை ஆந்ரேஜா கிளெபக்குடன் ஜோடி சேர்ந்துள்ளார்.

இவர்கள் தங்களது முதலாவது சுற்றில் 6-4, 6-7 (5-7), 10-5 என்ற செட் கணக்கில் உக்ரேய்னின் லூட்மைலா கிச்செனோக்- நாடியா கிட்செனோக் இணையை போராடி தோற்கடித்து கால் இறுதிக்குள் நுழைந்தனர்.

இந்த ஆட்டம் ஒரு மணி 38 நிமிடங்கள் நீடித்தது. கடந்த ஜனவரி மாதம் கொரோனாத் தொற்றில் சிக்கிய சானியா மிர்சா அந்த பாதிப்பில் இருந்து குணமடைந்து புதிய சீசனை வெற்றியோடு தொடங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது. (4)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# ராஜபக்ஷ அரசை தோற்கடிப்பதே எமது இலக்கு



(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே ராஜபக்ஷ அரசாங்கத்தை தோற்கடிக்க முடியும் என ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், கலாநிதி ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார்.

மாகாணசபை தேர்தலை நடத்துவதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவரும் நிலையில், அவர் இது குறித்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

அதற்காக எதிர்வரும் மாகாணசபை தேர்தலை பயன்படுத்திக் கொள்ளவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)

# கொவிட் நோயாளி தப்பியோட்டம்

(கொழும்பு)

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கொவிட் நோயாளி ஒருவர் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு வெள்ளவத்தையைச் சேர்ந்த குறித்த கொரோனா நோயாளி நேற்று அதி காலை காலி எல்பிட்டிய ஆதார வைத்தியசாலையிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவரை தேடி தற்போது எல்பிட்டிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

# விளக்கமறியல் மீண்டும் நீடிப்பு

(கொழும்பு)


சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கோட்டை நீதவான் நீதிமன்றில் குறித்த சந்தேகநபர்கள் நேற்று புதன்கிழமை முற்படுத்தப்பட்ட போது குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



தாக்குதல் தொடர்பிலான தாக்குதல்தாரிகளுடன் தொடர்பு எனத் தெரிவித்து, சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு கடந்த 10 மாதங்களுக்கு மேலாக சி.ஐ.டி. யினால் ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# பரீட்சை நிலையத்தில் ஆள்மாறாட்டம் இளைஞன் ஒருவர் கைது



(சிலாவத்தை)

முல்லைத்தீவு - சிலாவத்தை பரீட்சை மத்திய நிலையத்தில் பரீட்சார்த்தி ஒருவருக்கு பதிலாக பரீட்சைக்கு தோற்றிய ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நெடுங்கேணி - பரசன்குளம் பகுதியைச் சேர்ந்த 27 வயதான இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, கெக்கிராவ - மடாத்துகம பரீட்சை மத்திய நிலையத்தில் மாணவர்கள் சிலர் மேற்கொண்ட தாக்குதலில் சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர் ஒருவர் காயமடைந்து தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மூன்று மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-4)


## பகிரங்க ஏலவிற்பனை - 2020
## பருத்தித்துறை பிரதேசசபை-புலோலி

பருத்தித்துறை பிரதேசசபை தலைமை அலுவலகம் ,புலோலி, குடத்தனை மற்றும் செம்பியன்பற்று ஆகிய உப அலுவலகங்கள் என்பவற்றில் உள்ள பழைய கட்டுமானப் பொருட்கள்.அலு வலக உபகரணங்கள், வாகன டயர்கள், வாகன உதிரிப்பாகங்கள் என்பன பகிரங்க ஏலத்தில் பின்வரும் திகதி,விபரப்படி விற்பனை செய்யப்படவுள்ளன. ஏலவிற்பனையில் பொருட்களைகொள்வனவு செய்ய விரும்புபவர்கள் ஆனைவிழுந்தான் வாகனதரிப்பிடத்தில் ஏலவிற்பனை நடைபெறும் நாளுக்கு முதல்நாள் 09.03.2021 காலை 9.00 மணிமுதல் பி.ப 1.00 மணிவரை பொருட்களை பார்வையிடலாம் ஏலவிற்பனைப் பொருட்களை பெறுகின்றவர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்று அன்றையதினம் பி.ப 4.00 மணிக்குமுன்னர் பொருட் களை அவ்விடத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

ஏல விற்பனைத் திகதி - 10.03.2021 புதன்கிழமை
மு.ப 10.00 மணி

இடம் - வாகன தரிப்பிடம் ஆனைவிழுந்தான்,
பருத்தித்துறை பிரதேசசபை.

ஏல விற்பனை செய்யப்படும் பொருட்களின் விபரம் வருமாறு

| தொ.இ | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | Flower vase Large | 1 |
| 02 | File Tray Plastic | 2 |
| 03 | Printer | 1 |
| 04 | புல்லுவெட்டி | 1 |
| 05 | காட்டுக்கத்தி | 1 |
| 06 | மண்வெட்டி | 1 |
| 07 | Water pum (MK1212T8E595474MX) | 1 |
| 08 | குப்பைவாளி | 5 |
| 09 | Garbage bin | 6 |
| 10 | Computer set | 1 |
| 11 | ரைக்ரர் பெரிய ரயர்கள் | 10 |
| 12 | சிறிய ரயர்கள் முழுமையாக<br>பழுதடைந்தது மோட்டார் சைக்கிள் டயர் | 08<br>01 |
| 13 | சிறிய ரயர்கள் பகுதியளவில் பழுதடைந்தது | 04 |
| 14 | Single cab pickup வாகன ரயர்கள் | 02 |
| 15 | Double cab pickup வாகன ரயர்கள் | 04 |
| 16 | பழைய வாகன பற்றிகள் | 04 |
| 17 | பனைமரங்கள், சிலாகைகள்,மரக்குற்றிகள் | |
| 18 | பழையதகரங்கள் | |
| 19 | பைப் | |
| 20 | பழைய இரும்புகள்,கேற் | |

தவிசாளர்,
பருத்தித்துறை பிரதேசசபை,
புலோலி.

(C-1584)


# 417 பேர் மேலும் குணமடைவு

(கொழும்பு)

நாட்டில்கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் 417 பேர் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதனை அடுத்து நாட்டில்கொரோனாத் தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 80 ஆயிரத்து 437 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனா தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 83 ஆயிரத்து 870 ஆக காணப்படுகின்றது.

இதில் 2 ஆயிரத்து 950 பேர்தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதே வேளை இலங்கையில் கொரோனா தொற்றினால் இதுவரை 483 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)


## 45 ம் நாள் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



தோற்றம் 13.08.1982

மறைவு 20.01.2021

திதி.பூர்வ பட்ச அட்டமி

கடந்த 20.01.2021 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்ப விளக்கு

### அமரர் கிருஷ்ணன் பிரதீபன் [மணி]

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 05.03.2021 வெள்ளிக்கிழமை காலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்படும். 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கைலந்தோட்டம் அல்வாய்,
கிழக்கு அல்வாய்.

குடும்பத்தினர்.



## கண்ணீர்அஞ்சலி

எமது சக நண்பன் திரு. பாலா
அவர்களின் அன்புத் தந்தை

### பி.தங்கமுத்து



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஆழ்ந்த துயரத்துடன்
யாழ்ப்பாண மருத்துவ
பிரதிநிதிகள் சங்கம்

[6004]

# பிரான்ஸ் தூதரக அதிகாரி யாழ்.மாநகர முதல்வரை சந்தித்தார்



(யாழ்ப்பாணம்)
இலங்கைக்கான பிரான்ஸ் தூதரக அதிகாரி வேர்னால்ட் லேலார்ஜ் (Bernard lelarge) யாழ்ப்பாண மாநகர சபை முதல் வர் சட்டத்தரணி வி. மணிவண்ணனை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் இ.ஜெயசீலன், மாநகர சபையின் செயலாளர் அ.சீராளன் உள்ளிட்டவர்களும் இணைந்திருந்தனர். (5-4-33)

# அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன

(கரணவாய்)
மண்டான் களப்பு கடல் நீரேரியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்காக முதற்கட்டமாக 27 பேருக்கான தொழில் அனுமதிப்பத்திரங்களை மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கி வைத்தார்.

நேற்று புதன்கிழமை மண்டான் பகுதியிலுள்ள 270 குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் களப்பு பகுதியில் இறால் குஞ்சு விடும் செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, களப்பு கடல் நீரேரியில் மீன்பிடிப்பதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கி வைத்தார். (5-4-60)

# சிறப்பாக சேவையாற்றியவர்களுக்கு பாராட்டுதலும் கௌரவிப்பும்





(குப்பிழான்)
இணுவில் அறிவாலயத்தின் ஏற்பாட்டில் கௌரவிப்பு மற்றும் பாராட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இணுவில் அறிவாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

மேற்படி விழாவில் கொரோனாவுக்கு மத்தியில் சிறப்பான சுகாதார சேவைகள் ஆற்றி வரும் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஆறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் இணுவில் கிராமத்தைச் சேர்ந்த ஆறு கல்வியாளர்ககள் கௌரவிக்கப்பட்டனர்.

மேற்படி விழாவில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ் சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.(5-4-18)

# மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள நல்லூர் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குப்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி (ARV) வழங்கப்படவுள்ளது.

எனவே தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

அந்தவகையில், எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு மூத்தவிநாயகர் சனசமூக நிலையம், முற்பகல் 11 மணிக்கு ஆசீர்வாதப்பர் வீதி சுகாதார கல்வி மையம், பிற்பகல் 2.30 மணிக்கு நாயன்மார் வீதி சுகாதார கல்வி மையம், 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு யூக்கோவா பாலர் பாடசாலை, முற்பகல் 11 மணிக்கு வெயிலுகந்தபிள்ளையார் கோவில் செம்மணி வீதி, பிற்பகல் 2.30 மணிக்கு கடுக்காய்வீதி, 10 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு நாவலர் வீதி ஆனைப்பந்தி சந்தி, முற்பகல் 11 மணிக்கு பருத்தித்துறை வீதி உயர் கல்லூரி அருகாமை, பிற்பகல் 2.30 மணிக்கு அரசடி ஜன சக்தி சனசமூக நிலையம், 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பழம் வீதி ஞானசோதி சனசமூக நிலையம், முற்பகல் 11 மணிக்கு சிவன் புது வீதி, பிற்பகல் 2.30 மணிக்கு மணல்தறை லேன், 15 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஜமுனா வீதி கல்வி நிலைய மையம், முற்பகல் 11 மணிக்கு சங்கிலியன் மன்றம் பருத்தித்துறை வீதி, பிற்பகல் 2.30 மணிக்கு செட்டியார் தோட்டம் பகுதி, 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு வைமன் வீதி எடிசன் அக்கடமி அருகாமை, முற்பகல் 11 மணிக்கு அம்மன் வீதி, பிற்பகல் 2.30 மணிக்கு முத்தமிழ் முன்பள்ளி ஆடியபாதம் வீதி, 17 ஆம் திகதி புதன்கிழமைமுற்பகல் 9 மணிக்கு சங்கிலியன் வீதி, முற்பகல் 11 மணிக்கு கொண்டலடிச் சந்தி, பிற்பகல் 2.30 மணிக்கு கோவில் வீதி பண்டாரக்குளம், 18 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு செட்டித் தெரு நல்லூர் முருகன் சனசமூக நிலையம், முற்பகல் 11 மணிக்கு நல்லூர் குறுக்குத் தெரு சந்தி, பிற்பகல் 2.30 மணிக்கு கைலாயப்பிள்ளையார் கோவிலடி கோயில் வீதி, 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு துர்க்கா மணிமண்டபத்தடி கோவில் வீதி, முற்பகல் 11 மணிக்கு பண்டாரக்குளம், பிற்பகல் 2.30 மணிக்கு கொண்டலடி ஆகிய இடங்களில் வளர்ப்பு நாய்களுக்கான விசர்நோய் தடுப்பூசி வழங்கப்படும்.(5-4)




# ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)
ஊர்காவற்றுறை மாவட்ட நீதவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான பொருட்கள் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்றில் ஏல விற்பனை செய்யப்படவுள்ளது.

இவ் ஏலத்தில் பங்கேற்பவர்கள், ஏலம் கோருபவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்க வேண்டும். ஏலத்தில் பெறப்படும் பொருட்களுக்கான கொடுப்பனவுகள் பணமாகவே செலுத்தப்படல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஏல விற்பனையின்போது சமுகமளிப்போர் முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளியினைப் பேணி நடக்க வேண்டும் என ஊர்காவற்றுறை மாவட்ட நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.(5-4)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் வட்டுக்கோட்டை சுப்பிரமணியம் வித்தியாசாலையில் கல்வி கற்று வரும் பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த 3 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.



யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நெடுங்குளம் பகுதியில் சப்ரிகம (நிறைவான கிராமம்) திட்டம் ஊடாக அமைக்கப்பட்ட வாழ்வாதார அபிவிருத்தி நிலையம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி நிலையம் என்பன நேற்று புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டன.

யாழ்ப்பாண பிரதேச செயலர் சா.சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டு நிலையங்களைத் திறந்து வைத்தார். மேலும் நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு அடுத்த மாதம் முதல் தடுப்பூசி

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு அடுத்த மாதம் முதல் கொரோனாத் தடுப்பூசி வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமருடன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பேச்சு வார்த்தையின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

அதன்படி, மூடப்பட்டுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களையும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

பல கட்டங்களின் கீழ் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இந்தத் தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன. (நி-4)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




திரு.

**நல்லதம்பி நந்தன்** (அதிபர்)

( B.Ed, M.Ed, Bit, SLPS III )

யா/ கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க பாடசாலையில் 25.02.2021 அன்று அதிபர் கடமையைப் பொறுப் பேற்ற நல்லதம்பி நந்தன் அவர்கள் யாழ். பல்கலைக் கழகத்தினால் வழங்கப்பட்ட முதுகல்விமாணி (M.Ed-class- I) பட்டத்தில் முதன்மைத் தேர்ச்சி பெற்றதையிட்டு வாழ்த்துவடன் மேலும் பல உயர் பட்டங்கள், பதவிகள் பெற்று பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/ கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க.பாடசாலை.**

(C-1585)



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 9 3/4 செவ் 5 சூரி 2 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: சிவில் இஞ்சினியர் லண்டன், PR உண்டு, இந்தியா வரலாம்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், வெளிநாடும் விரும்பத்தக்கது.
தொ.இ: **B/11534**

பிறப்பு: 1992 இந்து நட்சத்திரம்: மகம்
கி.பா: - செவ் 11 சூரி 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: **A/L** பிரான்ஸ் இல் **PR** உண்டு.
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: **B/11536**

பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: சுவாதி
கி.பா: செவ் 12 சூரி 1 இல்
உயரம்: 6'1"
தகைமை/தொழில்: **AIB Banking, Work-** நிரந்தர வங்கியாளர்
எதிர்பார்ப்பு: அழகிய படித்த குடும்ப பாங்கான உத்தியோகம் பார்க்கும் பெண், உள்நாடு மட்டும்
தொ.இ: **B/11539**

பிறப்பு: 1984 இந்து நட்சத்திரம்: ரேவதி
கி.பா: செவ் 11 சூரி 6 இல்
உயரம்: 5.2
தகைமை/தொழில்: **A/L**, மோட்டார் மெக்கானிக், விவசாயம், வேலை-மோட்டார் கடை
எதிர்பார்ப்பு: சாதரண படித்த பெண்
தொ.இ: **B/11540**

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1982 இந்து நட்சத்திரம்: அத்தம்
கி.பா: செவ் 6 சூரி 11 இல்
தகைமை/தொழில்:. **O/L** கணனி, உளவியல், யோகா ஆசிரியர்
எதிர்பார்ப்பு: வெளிநாடும் மட்டும், விவாகரத்தானவரும் பிள்ளைகள் உள்ள வரன் ஏற்கப்படும்.மணமகள் விவாகரத்து ஆகி பிள்ளைகள் தகப்பனாருடன் உள்ளனர்.
தொ.இ: **B/B/1604**

பிறப்பு: 1986 இந்து நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 33 செவ் 4 சூரி 1 இல்
உயரம்: 5.5
தகைமை/தொழில்: **O/L** எதிர்பார்ப்பு: உள்நாடும், வெளிநாடும் எதிர்பார்க்கப்படும்
தொ.இ: **B/11606**

பிறப்பு: 1992 இந்து நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 53 செவ் 8 சூரி 9 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: **M.B.B.S. Doctor (G.O.V)**
எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும், வைத்தியர், பொறியிலாளர், விரிவுரையாளர்.
தொ.இ: **B/11614**

பிறப்பு: 1995 இந்து நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 7 - செவ் 10 சூரி 9 இல்
உயரம்: 162.5cm
தகைமை/தொழில்: **BBM, ACCA, Accountant, Work-Account**
எதிர்பார்ப்பு: **Bank, Accountant, Q.S**
தொ.இ: **B/11615**

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**


# பொதுமக்களுக்கான அறிவித்தல்

**முன்னர் நியமிக்கப்பட்டவிசாரணை ஆணைக் குழுக்களாலும் மற்றும் குழுக்கள் மூலமும் அறிக்கையிடப்பட்டுள்ள மனித உரிமை தொடர்பாக புலனாய்வு செய்தல், விசாரணை செய்தல் மற்றும் அறிக்கையிடல் அல்லது தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களால் இல.17 1948 ம் ஆண்டு விசாரணை ஆணைக் குழுச் சட்டத்தின் 2 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய 2021 ஜனவரி 21ம் திகதிய 2211/55 இலக்க அதி விசேட வர்த்தமானி மற்றும் 2021 பெப்ரவரி 12 ம் திகதிய 2214/75 இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம் மேற்சொல்லப்பட்ட ஆணைக் குழுவை கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக புலனாய்வு செய்தல், விசாரணை செய்தல் மற்றும் அறிக்கையிடல் அல்லது தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக நியமித்துள்ளார்

அ) மனித உரிமை மீறல்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்காக முன்னர் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்களின் மூலம் நடத்தப்பட்ட புலனாய்வுகளின் போது பாரதூரமான வகையிலான மனித உரிமை மீறல்கள், பாரதூரமான அளவில் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறுதல்கள் மற்றும் வேறு அவ்வாறான பாரதூரமான குற்றங்கள் தொடர்பாகக் வெளிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை கண்டறிதல்;

ஆ) அத்தகைய முன்னர் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்களினால் மேற்போந்த பாரதூரமான அளவில் மனித உரிமை மீறல்கள், பாரதூரமான அளவில் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் மற்றும் அவ்வாறான தவறுகள் தொடர்பாகக் கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் யாது என்பதனை இனங்காணுதல் மற்றும் சொல்லப்பட்டவிடயங்கள் தொடர்பாக செயற்பட்ட விதம் அவை தொடர்பாக பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும் அவை தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறைகளையும;

இ) சொல்லப்பட்ட பரிந்துரைகள் தொடர்பாக நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கமைய இதுவரை செயற்பட்டுள்ள விதம் மற்றும் தற்போதைய அரச கொள்கைகளுக்கமைய மேலும் அப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பதையும்;

ஈ) மேற் குறிப்பிடப்பட்ட (ஆ) மற்றும் (இ) இல் குறிப்பிட்ட படி நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்பது தொடர்பாக மேற்பார்வை செய்தல்;

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்புபட்ட எழுத்து மூல முறைப்பாடுகளை அல்லது தகவல்களை அல்லது வேறு ஏதேனும் ஆவணங்களை விசாரணை செய்வதற்காக இவ் ஆணைக் குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு எவரேனும் ஆளை, ஆட்களை மற்றும் நிறுவனங்களை இவ்வாணைக்குழு இத்தால் கேட்டுக் கொள்கின்றது. உண்மை விடயங்கள் தொடர்புபட்ட ஏதாவது முறைப்பாடுகளுக்கு அல்லது ஏதேனும் கூற்றுக்களுக்கு ஆதரவாக இயலுமான விடத்து சத்திய கடதாசி சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேற்காணும் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்காணும் சகல விடயங்கள் அல்லது ஒரு விடயம் தொடர்பான கருத்துரைகள் சிங்கள மொழி மூலமாகவோ தமிழ்மொழி மூலமாகவோ அல்லது ஆங்கிலமொழி மூலமாகவோ சமர்ப்பிக்கலாம்.

சகல கருத்துரைகளும் ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் செயலாளருக்கு 2021 ஏப்ரல் மாதம் 2ம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கின்ற சகல கருத்துரைகளிலும் தகவல் தருகின்றவர்களின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

கிடைக்கப்பெற்ற எழுத்து மூலமான கருத்துரைகளைப் பரிசீலித்த பின்னர் ஆணைக்குழு வாய்மூல சாட்சியம் வழங்குவதற்காக எவரேனும் ஆளை, ஆட்களை அல்லது நிறுவனத்தை அழைக்கலாம். வாய்மூல சாட்சியம் வழங்குவதற்கான திகதிகள் உரியவாறு அறிவிக்கப்படும்.

ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கும் ஒவ்வொரு ஆள் அல்லது ஆட்களுக்கு திருத்தப்பட்டவாறான 1948 ஆம் ஆண்டின் 17ம் இலக்க விசாரணை ஆணைக் குழுக்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய சாட்சியாளர்களுக்கான சிறப்புரிமைகள் மற்றும் திருத்தப்பட்டவாறான 2015ம் ஆண்டின் 4ம் இலக்க குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களுக்கு உதவிமற்றும் பாதுகாப்புத் தொடர்பான சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு குற்றச் செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உரிமைகள் மற்றும் உரித்துக்கள் கிடைக்கும்.

ஆணைக்குழுவின் ஆணைப்படி
ஆணைக்குழுவின் செயலாளர்

2021 மார்ச் 4

எழுத்து மூல தொடர்பாடல்கள் அனைத்தும் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

செயலாளர்
முன்னர் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்களாலும் மற்றும் குழுக்கள் மூலமும் அறிக்கையிடப்பட்டுள்ள மனித உரிமை தொடர்பாக புலனாய்வு செய்தல், விசாரணை செய்தல் மற்றும் அறிக்கையிடல் அல்லது தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு

1 ஆம் மாடி, புளொக் இல-2, அறை 102
பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்
பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு-07
மின்னஞ்சல் : secretary@pcihr.gov.lk

(C-1227)


# முல்லை.பாடசாலையில் மழைநீர் சேமிக்கும் திட்டம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு கோட்டைக் கட்டியகுளம் மகா வித்தியாலயத்தில் குடிநீருக்காக மழை நீர் சேமிக்கும் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. நீர் வழங்கல் வடிகால மைப்புச் சபையினால் இத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

துணுக்காய் கல்வி வலயத்தில் குடிநீர் நெருக்கடியினை எதிர்கொள்கின்ற பாடசாலைகளில் ஒன்றாக கோட்டைக்கட்டிய குளம் மகா வித்தியாலயம் காணப்படுகின்றது.

மாணவர்கள் வீடுகளில் இருந்தே பாடசாலைக்கு குடிநீர் கொண்டு செல்கின்ற நிலைமை காணப்படுகிறது.



இந்நிலையில் 30,000 லீற்றர் மழை நீரினை சேகரிக்கின்ற திட்டமொன்றினை குறித்த பாடசாலையில் நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இப் பாடசாலையில் உள்ள கிணற்றுநீர் உவர் நீராக காணப்படுகின்றது. பாடசாலையின் தேவைகளுக்கு வெளியில் இருந்தே குடிநீர் எடுத்து வரப்படுகிறது. குறித்த குடிநீர்த் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

குழுவின் தலைவராக மு.சின்னத்தம்பி பெற்றோர்கள் சார்பாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். முல்லைத்தீவு மாவட்டத்தில் முப்பதிற்கு மேற்பட்ட பாடசாலைகளில் குடிநீர் நெருக்கடி காணப்படுகிறது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (5-4-350)



தேசிய உயிரினவாழ் அபிவிருத்தி அதிகாரசபையின் கரையோர நீர் உயிரினவாழ் விரிவாக்கல் காரியாலயத்தின் ஏற்பாட்டில் மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தலைமையில் பட்டதாரிப் பயிலுநர்களிற்கான கருத்தரங்கு நேற்று முன்தினம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் ம. பிரதீபன், உதவி மாவட்டச் செயலாளர் திருமதி. ச.கி.நி. கமலராஜன், மன்னார் மாவட்ட நீர் உயிரினவாளர் சு.மதனராஜ் ஆகியோரும் கலந்துகொண்டார்கள். (படம்-சிவசாந்தன்)

# அரசகாடுகளை விடுவிக்க நடவடிக்கை முன்னெடுப்பு

(நெளுக்குளம்)

வவுனியா பிரதேச செயலகத்தின் அபிவிருத்திக்குழு கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது வவுனியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட 4245 ஏக்கர் அரச காடுகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக வனவளத்திணைக் களம் சார்பாக முன்னிலை யாகிருந்த உத்தியோகத்தர்கள் தெரிவித்துடன் இது தொடர்பாக மாவட்ட அரச அதிபருக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஒருங்கிணைப்புக் குழு தலைவர் கு. திலீபன்.நாங்கள் மக்களுடன் சந்திப்பை மேற்கொள்பவர்கள். அவர்களிற்கு பதில் சொல்லவேண்டும். எனவே அரச அதிபருக்கு தெரியப்படுத்துவதற்கு முன்னதாக எங்களுக்கும் அது தொடர்பாக தெரியப்படுத்தி ஒரு பிரதியை அனுப்புமாறு தெரிவித்திருந்தார். (5-4-250-299)

# நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்திக்கு 13 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது

(நெளுக்குளம்)

தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக வவுனியா மாவட்டத்திலுள்ள குளங்களில் மீன் குஞ்சுகள் மற்றும் இறால் குஞ்சுகளை விடுவதற்காக 13 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் முதற்கட்டமாக வவுனியா தாண்டிக்குளம் குளத்தில் சுமார் 15,000 மீன் குஞ்சுகள் விடப்பட்டன.



இந்நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன், வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், பிரதேச செயலாளர் ந.கமலதாசன், தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வவுனியா பொறுப்பதிகாரியோ.நிசாந்தன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (5-4-299)

# யானைகள் தொல்லையை கட்டுப்படுத்த யானை வெடிகள் வழங்கப்பட்டன

(தருமபுரம்)

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்மடு, தருமபுரம், பெரியகுளம் முரசுமோட்டை, உரியான் போன்ற பகுதிகளில் நாளாந்தம் காட்டு யானைகளின் அழிவுகள் அதிகரித்தவண்ணம் உள்ளன.

தருமபுரம் பகுதியில் நேற்று முன்தினம் மக்கள் குடியிருப்புக்களுக்குள் புகுந்த யானைகள் பயன்தரக்கூடிய அளவிலான சுமார் 20 தென்னை மரங்களை முற்றாக அழித்துள்ளன.

சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய வன ஜீவராசிகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் சம்பவ இடத்திற்கு வருகை தந்தனர் .

அவர்கள் யானை வெடி மூலம் யானைகளை விரட்டியடித்தனர். இப்படி தினமும் நடைபெறுவதால் கண்டாவளைப் பிரதேச மக்களுக்கு தற்பாதுகாப்பிற்காக கண்டாவளை பிரதேச செயலாளரினால் யானை வெடிகள் வழங்கப்பட்டுள்ளன. (5-4-316)




# புடைவை நிலையத்தில் தீ விபத்து புடைவைகள் அனைத்தும் தீக்கிரை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி நீதிமன்றத்திற்கு அருகாமையுள்ள புடைவையகம் ஒன்று நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் தீப்பற்றி எரிந்துள்ளது. குறித்த புடைவையகத்தை உரிமையாளர் பூட்டிவிட்டுச் சென்ற நிலையில் தீப்பற்றி எரிந்துள்ளது.

இதனை அவதானித்தவர்கள் உரிமையாளருக்கு தெரியப்படுத்தினர்.தகவல் வழங்கப்பட்டதையடுத்து தீயணைப்பு படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதற்கு கிளிநொச்சி வர்த்தகர்கள், கிளிநொச்சி பொலிஸார் மற்றும் பொது மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கினர்.

எனினும் கடையிலிருந்த அரைவாசிபுடைவைகள் எரிந்த நிலையிலும் அரைவாசி புடைவைகள் புகைபிடித்து பாவனைக்கு உதவாத நிலையிலும் காணப்பட்டன.

இத் தீவிபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-271)

# பேருந்து நடத்துநர், சாரதி மீது தாக்குதல்; பொலிஸார் தீவிர விசாரணை

(குருமன்காடு)

வவுனியா நகரில் தனியார் பேருந்து சாரதி மற்றும் நடத்துநர் மீது நேற்று முன்தினம் மாலை இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட தாக்குதலில் நடத்துநர், சாரதி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் மதியம் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் நபர் ஒருவர் தொலைபேசியினை வவுனியாவில் உள்ள தனது நண்பரிடம் கொடுக்குமாறு குறித்த நடத்துநரிடம் வழங்கிச் சென்றுள்ளார்.

பேருந்து வவுனியாவை சென்றடைந்ததும் தொலைபேசியை வழங்கியவரின் நண்பர் பேருந்து நடத்துநரிடம் தொலைபேசியினை வாங்கிச் சென்றுள்ளார். அவர் தொலைபேசியினை வாங்கிச் சென்ற பின்னர் பேருந்து நிலையத்திற்குச் சென்ற ஒரு பெண் நடத்துநரிடம் தொலைபேசியினை கேட்ட போது தொலைபேசியினை கொடுத்து விட்டதாக அவர் கூறியுள்ளார்.

அதன்போது அப்பெண்ணுடன் வந்த சில நபர்கள் சாரதி மற்றும் நடத்துநரை தாக்கியதுடன் நடத்துநரை முச்சக்கரவண்டியில் ஏற்றிச் சென்று வவுனியா நகரை அண்டிய தோணிக்கல் பகுதியில் உள்ள விளையாட்டு மைதானத்தில் வைத்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதல் நடத்திய பின்னர் முச்சக்கரவண்டியில் ஏற்றிச் சென்று மீண்டும் பேருந்து நிலையத்தில் இறக்கி விட்டு தொலைபேசி கிடைத்து விட்டது. தவறு நடந்து விட்டது மன்னித்து விடுங்கள் என்று கூறி நடத்துநரை அவ்விடத்தில் விட்டுச் சென்றுள்ளார்கள்.

காயமடைந்த நடத்துநர், மற்றும் சாரதி வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தமையுடன் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். தாக்குதல் நடத்திய நபர்கள் தொடர்பில் சி.சி.ரி.வியின் உதவியுடன் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-250)

# இராசிபலன்

**04.03.2021**
**மாசி 20, வியாழக்கிழமை,**
**சஷ்டி பின்னிரவு 2.17 மணிவரை**
**விசாகம் பின்னிரவு 3.57 மணிவரை**
**சுபநேரம் 7.56-9.26 மணிவரை**
**இராகுகாலம் 1.56-3.26 மணிவரை**
**சந்திராஷ்டமம் அச்சுவினி**

வளவன்


**மேஷம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.


**ரிஷபம்**
பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், உடல் நலம் சீராகும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.


**மிதுனம்**
குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புண்ணி காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


**கடகம்**
பெற்றோர் மீது பிரியம் கூடும், விருப்பங்கள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள, செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.


**சிம்மம்**
நினைத்தது நிறைவேறும் நாள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், செய்தொழில் மேன்மையுண்டு.


**கன்னி**
உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவிர்கள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வாக்கு மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.


**துலாம்**
சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் ரீதியான பயணத்தை மேற்கொள் வீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, பயணங்கள் கைகூடும்.


**விருச்சிகம்**
ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், காரியங்களில் வெற்றி பெற கணபதியை வழிபட வேண்டிய நாள், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்.


**தனுசு**
தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும் மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், பொது வாழ்வில் மதிப்பு உயரும், காரிய அனுகூலமுண்டு.


**மகரம்**
பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள், போசன சுகமுண்டு.


**கும்பம்**
தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.


**மீனம்**
உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலையுண்டு. குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

சொற்கள் மண்ணின் புதல்விகள், பொருட்கள் விண்ணின் புதல்வர்கள்

# பல்கலைக்கு 10,588 மேலதிக மாணவர்கள்
# வசதிகளை அதிகரிக்க பிரதமர் அறிவுறுத்து

**(கொழும்பு)**

**சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்திற்கு அமைவாக, மேலதிகமாக இணைத்துக் கொள்ளப்பட்ட பத்தாயிரத்து 588 பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஏற்றவாறே பல்கலைக்கழக வசதிகளை மேம்படுத்துவதற்கு பிரதமரால் ஆலோசனை வழங்கப் பட்டுள்ளது.**



பல்கலைக்கழகங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவது குறித்து அலரி மாளிகையில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அனைத்துப் பல்கலைக்கழக துணைவேந்தர்களுடனான கலந்துரையாடலின்போதே பிரதமர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாண்டில் 41 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, சுதந்திரத்தின் பின்னர் முதன்முறையாக இம்முறை 10 ஆயிரத்து 588 மாணவர்கள் மேலதிகமாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

அதற்கமைய வைத்திய பீடங்களில் மாத்திரம் 479 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பேராசிரியர் சம்பத் அமரதுங்க, இது நான்கு புதிய வைத்திய பீடங்களை ஆரம்பிப்பதற்குச் சமமாகும் என்றும் தெரிவித்தார்.

எனினும், அனைத்து பல்கலைக்கழக துணைவேந்தர்களின் ஆதரவினாலேயே இவை அனைத்தையும் நிர்வகிக்க முடிந்ததென்றும், பல்கலைக்கழக அமைப்பின் பௌதீக மற்றும் மனித வளங்களை நிர்வகிக்கக் கூடுதலாக சுமார் ஐந்து பில்லியன் ரூபாய் தேவைப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், பல்கலைக்கழக மாணவர்களின் கல்விக்காக இதுவரை வழங்கப்படும் நிதிக்கு மேலதிகமாக, இந்தக் கூடுதல் நிதியைக் கட்டம் கட்டமாக பல்கலைக்கழக அமைப்புக்கு வெளியிடுமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தினார்.

அத்துடன், சம்பந்தப்பட்ட முறையைப் பொதுத் திறைசேரி மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் இணைந்து கலந்துரையாடலின் மூலம் தீர்மானித்துக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

கொவிட்-19 தொற்றுக்கு மத்தியில் பல்கலைக்கழகத்தில் விரிவுரைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு விரிவுரையாளர்களதும் மாணவர்களதும் ஒத்துழைப்புக் கிடைக்கும் என்று தெரிவித்த பேராசிரியர் சம்பத் அமரதுங்க, பல்கலைக் கழகங்களை மூடுதல் எனும் நடவடிக்கை மீண்டும் முன்னெடுக்கப்படாது" எனத் தெரிவித்தார். (நி-4)

# இலங்கையை சர்வதேச நீதிமன்றில் பாரப்படுத்துமாறு வலியுறுத்தி
# மட்டக்களப்பிலும் உணவுத் தவிர்ப்புப் போராட்டம்





(மட்டக்களப்பு)

இலங்கையை சர்வதேச நீதிமன்றில் பாரப்படுத்துமாறு வலியுறுத்தி மட்டக்களப்பிலும் சுழற்சி முறையிலான உணவுத்தவிர்ப்பு போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாமாங்கேஸ்வரர் ஆலயத்திற்கு முன்பாக பொத்துவில் முதல் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்று புதன்கிழமை காலை முதல் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு நீதி கோரி, இலங்கையை குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த வேண்டும் உட்பட 4 கோரிக்கைகளை முன்வைத்து பிரித்தானியாவில் வசிக்கும் அம்பிகை செல்வகுமார், சாகும் வரையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை லண்டனில் கடந்த 27 ஆம் திகதி ஆரம்பித்தார்.

அவருக்கு வலுச் சேர்க்கும் வகையில் கடந்த 28 ஆம் திகதி முதல் நல்லூரில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுடன், அரச தலைவர்கள், காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் உள்ளிட்ட பலர் இணைந்து கொண்ட நிலையில், நேற்று 4 ஆவது நாளாகவும் தொடர்ச்சியாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)




# முட்டாள் வேலைக்காரன்



நடந்ததை அறிந்த வணிகன். முட்டாளாக இருக்கிறாயே! இப்படிச் செய்யலாமா? என்று வேலைக்காரனைத் திட்டினான்.

சில நாட்கள் சென்றன. திடீரென்று அந்த ஊரில் மண்ணெண்ணெய்ப் பஞ்சம் வந்துவிட்டது.

"தன்னிடம் இருக்கும் இருபத்தைந்து பீப்பாய் எண்ணெயைப் பதுக்கி வைத்தால் நிறைய இலாபம் கிடைக்கும்!" என்று நினைத்தான் அந்த வணிகன்.

உடனே வேலைக்காரனை அழைத்து, "கடையில் இருக்கும் மண்ணெண்ணெய் எல்லாவற்றையும் இன்றிரவு நம் தோட்டத்தில் பள்ளம் தோண்டிப் புதைத்துவிடு. யாருக்கும் தெரியக் கூடாது!" என்றான்.

அவனும் வணிகன் சொன்னபடியே, நள்ளிரவில் பெரிய பள்ளம் தோண்டினான்.

ஒவ்வொரு பீப்பாயாக உருட்டிச் சென்று அதிலிருந்த மண்ணெண்ணெயைப் பள்ளத்தில் ஊற்றினான்.

இப்படியே அனைத்துப் பீப்பாய்களில் இருந்த எண்ணெயையும் ஊற்றி முடித்தான்.


அப்போது அவனுக்குச் சந்தேகம் எழுந்தது. "மண்ணெண்ணெயைத் தோட்டத்தில் மறைக்கச் சொன்ன முதலாளி. இந்தக் காலிப் பீப்பாய்களை என்ன செய்வது? என்று சொல்லாமல் விட்டுவிட்டாரே..." என்று நினைத்தபடி வீட்டிற்குள் சென்று தூங்கிக் கொண்டிருந்த முதலாளியை எழுப்பி,"ஐயா! நீங்கள் சொன்னபடி மண்ணெண்ணெயைப் பள்ளம் தோண்டிப் புதைத்து விட்டேன். காலி பீப்பாய்களை என்ன செய்வது?" என்று தன் சந்தேகத்தைக் கேட்டான்.

வணிகன். "ஐயோ. என் மண்ணெண்ணெய் எல்லாம் போய்விட்டதே" என்று அலறினான். அன்றே அவனை வேலையிலிருந்து நீக்கினான்.

(முற்றும்)

# மகாபாரதம்






மீண்டும் தோல்வியுற்ற அம்பை, சிவனை நோக்கி தவமிருந்தாள்.

சிவன்அவளுக்குகாட்சி அளித்து "பெண்ணே! உன் கோரிக்கை இப்பிறவியில் நிறைவேறாது.

அடுத்த பிறவியில் அது நடக்கும் உன்னைக் காரணமாகக் கொண்டு பீஷ்மருக்கு மரணம் ஏற்படும்" என்றார்.

மறுபிறவிஎடுக்க நினைத்த அம்பை உடனே தீயில் விழுந்து மாண்டு போனாள். துருபதனின் மகளாக பிறந்தாள். சிகண்டி என்ற பெயர் தாங்கினாள்.

ஒருநாள் அரண்மனை வாயிலில் மாட்டப்பட்டிருந்த அந்த அழகிய தாமரை மாலையைக் கண்டு அதை எடுத்து அணிந்து கொண்டாள்.

இதை அறிந்த துருபதன் பீஷ்மருக்கு பயந்து தன் மகளை வீட்டை விட்டு வெளியே அனுப்பினான்.

பின்சிகண்டி தவ வாழ்க்கை மேற்கொண்டாள். இஷிகர் என்னும் முனிவருக்கு பணி விடை செய்யும் போது அம்முனிவர் கங்கை ஆற்றின் உற்பத்திஇடத்தில்விபஜனம் என்னும் விழா நடைபெறப் போகிறது.

அதற்கு வரும் "தும்புரு என்னும் மன்னனுக்கு பணிவிடை செய்தால் உன் எண்ணம்ஈடேறும்" என்றார்.

சிகண்டி அங்கு போனாள். அங்கு பல கந்தர்வர்கள் இருந்தனர்.

அவர்களில் ஒருவன் சிகண்டியைப் பார்த்து நாம் இருவரும் உருவத்தை மாற்றிக் கொள் ளலாமா? அதாவது உன் பெண் வடிவத்தை எனக்குத் தா.

நான் என் ஆண் வடிவத்தை உனக்குத் தருகிறேன்" என்றான். சிகண்டியும், அதற்கு சம்மதித்து ஆணாக மாறினாள்.

பின் போர்ப்பயிற்சிகளில் ஈடுபட்டு நிகரற்ற வீரனாக திகழ்ந்தாள். பாஞ்சாலத்திற்கு திரும்பச் சென்று தந்தை துருபதனை சந்தித்து நடந்த விடயங்களைக் கூறி இனி பீஷ்மருக்கு பயப்பட வேண்டாம் என்றாள். துருபதனும் மகிழ்ந்து அவனை(ளை) ஏற்றுக் கொண்டான்.

(தொடரும்)

# எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும்

## ஐ.நா.கூட்டத்தில் இந்தியா கண்டிப்பு

(ஜெனிவா)

**அரசு ஆதரவுடன் நடக்கும் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும் என்று ஐ.நா. கூட்டத்தில் இந்தியா தெரிவித்தது.**

ஜெனிவாவில் நடக்கும் ஐ.நா. மனித உரிமை கவுன்சில் கூட்டத்தொடரில், இந்தியா மீது பாகிஸ்தான் குற்றம் சாட்டியது. அதற்கு பதில் அளிக்கும் உரிமையை பயன்படுத்தி, இந்தியா நேற்று முன்தினம் பதில் அளித்தது. இதுகுறித்து ஜெனிவாவில் உள்ள இந்தியாவின் நிரந்தர தூதரகத்தின் முதன்மைச் செயலாளர் பவன்குமார் பதே, மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் பேசியதாவது,

இந்தியாவுக்கு எதிராக பொய் பிரசாரம் மேற்கொள்ளும் நோக்கத்தில், ஐ.நா. மனித உரிமை கவுன்சிலை பாகிஸ்தான் திட்டமிட்டு தவறாக பயன்படுத்தி வருகிறது. மோசமான பொருளாதார நிலையில் இருக்கும் பாகிஸ்தான், இந்த கவுன்சிலின் நேரத்தை வீணடிக்கக் கூடாது.

அரசு ஆதரவுடன் நடக் கும் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தையும், சிறுபான்மையினரின் மனித உரிமைகளை நசுக்குவதையும் நிறுத்துமாறு பாகிஸ்தானை இந்த கவுன்சில் வற்புறுத்த வேண்டும்.

ஐ.நாவால் தடை விதிக்கப்பட்ட எத்தனையோ பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தான் ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகிறது. அரசு நிதியில் இருந்து அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கி வருவதையும் இந்த கவுன்சில் அறியும். பயங்கரவாதிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாக பாகிஸ்தான் ஆகியிருப்பதாக அந்நாட்டு தலைவர்கள் ஏற்கனவே ஒப்புக் கொண்டுள்ளனர். மனித உரிமை மீறலின் மோசமான வடிவம் தான் பயங்கரவாதம்.

சுதந்திரம் பெற்றதற்கு பிறகு, இந்து, கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள் ஆகிய சிறுபான்மை யினரின் எண்ணிக்கை கணிச மாக குறைந்தது எப்படி என்று பாகிஸ்தானிடம் விளக்கம் கேட்க வேண்டும்.

பாகிஸ்தானில், அரசுக்கு எதிராக பேசுபவர்கள் தன்னிச்சையாக சிறைவைக்கப்படுகிறார்கள், காணாமல் போகிறார்கள், கொலை செய்யப்படுகிறார்கள். இந்த அராஜகங்களில் ஈடுபடும் பாதுகாப்பு படையினர், எந்த தண்டனையும் இன்றி தப்பி விடுகிறார்கள் என அவர் தெரிவித்தார். (நி-4)

# தனிச் சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக வைகோ அறிவிப்பு



(சென்னை)

சட்டசபை தேர்தலில் தனிச் சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

தேர்தல் குறித்து செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த அவர் மேற்படி குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், "ம.தி.மு.க. வேட்பாளர்கள் தனிச் சின்னத்தில் தான் போட்டியிடுவர். அதையே கட்சியினர் விரும்புகின்றனர்.

எத்தனை தொகுதிகள், பொதுச் சின்னம் என்ற வியூகங்களுக்கு பதிலளிக்க முடியாது. தி.மு.க. கூட்டணி உறுதியாக வெற்றி பெறும். நாங்கள் எட்டு தொகுதிகளில் வெற்றி பெற்றாலே கட்சிக்கு அங்கீகாரம் கிடைத்து விடும். நல்லதையே எதிர்பார்ப்போம்.

அதிக இடங்களில் தி.மு.க. போட்டியிட விரும்புவது அவர்களின் உணர்வு, நியாயம். தேர்தல் அறிக்கை பணிகள் நடக்கின்றன. அதை வெளியிட்ட பின் பிரசாரம் தொடக்கப்படும்" எனத் தெரிவித்தார். (நி-4)




சுவிசில் வங்கி ஒன்று நடத்திய ஓவியப் போட்டியில் தமிழ் சிறுமி வரைந்த ஓவியம் முதலிடம் பெற்றது. தமிழினத்தின் நிகழ்கால வலிகளை தத்ரூபமாக வரைந்து முதலாமிடம் பெற்ற சிறுமிக்கு பலர் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

# இராணுவத்தின் அடக்குமுறைக்கு மத்தியிலும் மியன்மாரில் தீவிரமடையும் மக்கள் போராட்டம்

(மியன்மார்)

இராணுவத்தின் இத்தகைய அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் மியன்மாரில் போராட்டம் தொடர்ந்து தீவிரமடைந்து வருகிறது.

மியன்மாரில் கடந்த மாதம் முதலாம் திகதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக அரசை கவிழ்த்துவிட்டு ஆட்சி அதிகாரத்தை இராணுவம் கைப்பற்றியது. நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி, ஜனாதிபதி வின் மைண்ட் உள்ளிட்ட அரசியல் தலைவர்களை சிறை வைத்துள்ள இராணுவம் நாட்டில் ஒரு வருடத்துக்கு அவசர நிலையைப் பிரகடனப்படுத்தி உள்ளது. இதற்கிடையில் ராணுவ ஆட்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து மியன்மார் மக்கள் கடந்த 4 வாரங்களாக கடுமையான





போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்த போராட்டங்களை ராணுவம் இரும்புக்கரம் கொண்டு அடக்கி வருகிறது.

இதில் உச்சகட்டமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை போராட்டக்காரர்கள் மீது ராணுவம் துப்பாக்கிச்சூடு நடத்தியது. இதில் 18 பேர் கொல்லப்பட்டனர்.

30-க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர். அது மட்டுமன்றி போராட்டத்தில் ஈடுபட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை இராணுவம் கைது செய்தது.

இந்த நிலையில் இராணுவத்தின் இத்தகைய அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் மியன்மாரில் போராட்டம் தொடர்ந்து தீவிரமடைந்து வருகிறது. (நி-4)

# தெற்கு கலிபோர்னியாவில் ஏற்பட்ட கோர விபத்தில் 13 பேர் பலி



(கலிபோர்னியா)

அமெரிக்க-மெக்ஸிக்கோ எல்லைக்கு அருகே தெற்கு கலிபோர்னியாவில் ட்ரக் - கப் வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி ஏற்பட்ட விபத்தில் குறைந்தது 13 பேர் உயிரிழந்துள்ளதுடன், பலர் காயமடைந்துள்ளனர்.

ஹோல்ட்வில் நகரின் வடக்கே நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை இந்த பயங்கர மோதல் நடந்ததாக இம்பீரியல் கவுண்டி தீயணைப்புத் துறை தெரிவித்துள்ளது.

# ஈராக்கில் அமெரிக்க விமான நிலையத்தை குறிவைத்து ரொக்கெட் தாக்குதல்கள்

(ஈராக்)

மேற்கு ஈராக்கில் நேற்று புதன்கிழமை அமெரிக்கா தலைமையிலான கூட்டணி படையினர் நடத்தும் ஒரு இராணுவ தளத்தை குறிவைத்து குறைந்தது 10 ரொக்கெட் தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் ஈராக்-சிரியா எல்லையில் ஈரான்-சீரமைக்கப்பட்ட போராளிகளின் இலக்குகளை அமெரிக்கா தாக்கிய பின்னர் பதிவான முதல் தாக்குதல் இதுவாகும்.



வெள்ளிக்கிழமை முன்னெடுக்கவுள்ள போப் பிரான்சிஸின் ஈராக் பயணத்திற்கு முன்னதாக இந்த தாக்குதல் வந்துள்ளது. ஒரு போப் ஈராக் நாட்டிற்கு செல்லும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும். (நி-4)

# சுற்றுலாத்துறையினருக்கு அடுத்தவாரம் தடுப்பூசி

(கொழும்பு)

சுற்றுலாத்துறையில் கடமையாற்றுவோருக்கும் கொரோனாத் தடுப்பூசி வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்கீழ் சுற்றுலாத்துறையிலுள்ள 25 ஆயிரம் பேருக்கு கொரோனாத் தடுப்பூசிகளை வழங்க தீர்மானித்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் சிறிபால ஹெட்டியாராச்சி கூறினார்.

இதனையடுத்து, சுற்றுலாத் துறையினரை மூன்று பிரிவுகளாக வகுத்து அடுத்த வாரம் முதல் தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். அதன்படி, தற்போது நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் தங்கும் ஹோட்டல் ஊழியர்களுக்கு முதல் கட்டத்தின் கீழ் தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளது.

இவர்களைத் தவிர சுற்றுலாப் பயணிகள் பயணிக்கும் வாகனங்களின் சாரதிகள், வழிகாட்டிகள் உள்ளிட்டோருக்கும் கொரோனாத் தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன என அவர் தெரிவித்தார். (நி-4)

# தோட்ட முகாமையாளர்கள் ஹற்றனில் ஆர்ப்பாட்டம்

(ஹற்றன்)

மஸ்கெலியா ஓல்டன் தோட்ட முகாமையாளரை தாக்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து முதல் தடவையாக தோட்ட முகாமையாளர்கள் நேற்று ஹற்றன் மல்லியைப்பூ சந்தியில் இரு மருங்கிலும் பதாகைகளைக் காட்சிப்படுத்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 10 ஆம் திகதி தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளமும் வழங்கப்படவில்லை. சம்பளம் பின் வழங்கியமைக்கும் குறித்த நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காததன் காரணமாகவும் கோபம் கொண்ட தொழிலாளர்கள் தோட்ட முகாமையாளர்கள் மற்றும் உதவி முகாமையாளர் தாக்கப்பட்டனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே தோட்ட முகாமையாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (நி-4)

# உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்

## தொடர்புடைய சூத்திரதாரியை வெளிப்படுத்த வேண்டும்

### 2 வருடங்களாக நியாயம் கிடைக்காமை கவலையளிக்கிறது

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களுடன் தொடர்புடைய முக்கிய சூத்திரதாரிகள் யார் என்பதை எதிர்வரும் ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் வெளிப்படுத்த வேண்டும்.

அவ்வாறில்லையெனில் நாம் கறுப்பு ஆடையணிந்தும், கறுப்புக் கொடிகளை ஏற்றியும் நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவோம் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

அப்பாவி பொதுமக்கள் கொல்லப்படுவதற்கு காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். மாறாக பௌத்த அமைப்புக்களை தடை செய்வதை நாம் எதிர்பார்க்கவில்லை என்றும் பேராயர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு பொறளையிலுள்ள பேராயர் இல்லத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை ஒருபுறமிருக்க குற்ற விசாரணைப் பிரிவு, புலனாய்வுப் பிரிவினரால் முன்னெடுக்கப்படுகின்ற விசாரணைகள் திருப்தியளிக்கக் கூடியவையாக இல்லை.

தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு 2 வருடங்கள் நிறைவடையவுள்ள போதிலும் நியாயம் கிடைக்காமை கவலையளிக்கிறது.

உயிர்த்த ஞாயிறு ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கையில் பொதுபலசேனா அமைப்பை தடை செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அப்பாவி பொதுமக்கள் கொல்லப்படுவதற்கு காரணமான முக்கிய சூத்திரதாரிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பது எமது கோரிக்கையே தவிர, பௌத்த அமைப்புக்களைத் தடை செய்வதல்ல.

இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் சமூகத்தில் இல்லாதவொரு பிரச்சினையை உருவாக்க வேண்டாம் என்று அனைவரிடமும் கேட்டுக்கொள்கின்றோம்.



அன்று ஆட்சி அதிகாரத்திலிருந்த சிலர் தகவல்கள் கிடைத்தும் கவனயீனமாக செயற்பட்டமை குற்றமாகும்.

அடிப்படைவாத தாக்குதல்களால் நூற்றுக்கணக்கான உயிர்கள் கொல்லப்பட்டுள்ளமை விளையாட்டல்ல. எனவே தற்போதேனும் முறையான நடவடிக்கை எடுக்காவிட்டால் எதிர்காலத்தில் மீண்டும் இது போன்றதொரு தாக்குதல் இடம் பெறக் கூடும்.

கடந்த ஆட்சியாளர்கள் மாத்திரமின்றி தற்போது ஆட்சியிலிருப்பவர்களும் தாக்குதல்களில் பாதிக்கப்பட்டோருக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்றார். (நி-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2244

**தனஞ்சயன்**

ஒபிஸ் கோபத்தை வீட்டில காட்டினா நடுத்தர வர்க்கம்...



வீட்டு கோபத்தை ஒபிசில காட்டினா முதலாளி வர்க்கம்...!

**சாருலதா**

எந்த இடத்தில் இருக்கிறோம் என்பது முக்கியமில்லை...



எவ்வளவு சந்தோசமா இருக்கிறோம் என்பதுதான் முக்கியம்...

**கண்மணி**

இன்றைய காலத்தில் பொய் பேசியதால் உருவான பகைகள் குறைவு...



உண்மை பேசியதால் உருவான எதிரிகள் அதிகம்...!

**சாரங்கன்**

கணவன்மார்கள் ஒரு சினிமா போன்றவர்கள்...



தயாரிப்பு:-அம்மா...!
இயக்கம்:- மனைவி...

**யமுனா**


படிப்பு கெட்டுப்போய் விடக் கூடாது என்பதற்காக புது ஐடியா...

குளிர்சாதனப்பெட்டி



**கலா**

உங்கள் திறமையை மற்றவர் நம்புவதற்கே வெற்றி தேவைப்படுகிறது! நீங்கள் நம்புவதற்கு ஒரு தோல்வியே போதும்!!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதால் கொரோனாத் தொற்று பரவும் அபாயம்

(கொழும்பு)

சாதாரண தரப் பரீட்சை மையங்களுக்கு வெளியே விளம்பர துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும் நபர்களால் மாணவர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகும் ஆபத்தை எதிர்கொள்வதாக பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

பரீட்சை மையங்களுக்கு வெளியே தனியார் கல்வி நிலையங்களைச் சேர்ந்தவர்கள் குழுமி நின்று துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து வருவது குறித்து தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவ்வாறு துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பது தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறும் செயற்பாடாகும் என சுட்டிக்காட்டிய பொலிஸ் பேச்சாளர், இவ்வாறு செயற்படுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்தார்.

பரீட்சை மையங்களுக்கு வெளியே துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு பரீட்சை ஆணையாளர் பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பரீட்சை மையங்களை விட்டு வெளியேறும் மாணவர்கள் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும் நபர்களுடன் தொடர்புகொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

துண்டுப் பிரசுரங்கள் எதனையும் இத்தகைய நபர்களிடம் இருந்து பெற்றுக்கொள்வதைத் தவிர்க்க வேண்டும் எனவும் அஜித் ரோஹண கேட்டுக்கொண்டார். (நி-4)

# பயணப் பையில் இருந்து சடலம் மீட்பு; பிரதான சந்தேக நபரும் சடலமாக மீட்பு

(கொழும்பு)

கொழும்பு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய, கடந்த திங்கட்கிழமை பகல் கொழும்பு-டாம் வீதி, ஐந்துலாம்பு சந்திக்கருகில் பயணப் பையிலிருந்து யுவதியின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் பயணப் பையிலிருந்து கண்டெடுக்கப்பட்ட யுவதியின் சடலம் ஹங்வெல்ல பகுதியிலிருந்து கொண்டு வரப்பட்டமை தெரியவந்தது.

பயணப்பையை வைத்துச் சென்ற நபர் ஹங்வெல்ல பகுதியிலிருந்து இல.143 பேருந்தில் அதனை எடுத்து வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் பயணித்த பேருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதையடுத்து, குறித்த பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநரிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின்போதே இந்தத் தகவல் கிடைக்கப் பெற்றதாகத் தெரிவித்தார்.

இந்த நிலையில் சமூக வலைத்தளங்கள் மற்றும் செய்திகளில் வெளியாகியுள்ள காணொளியின் அடிப்படையில் சந்தேகநபரை அடையாளம் காணுவோர், பொலிஸாருக்குத் தகவல்களை வழங்குமாறும் கோரப்பட்டிருந்தது.


இந்நிலையில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்ட பெண்ணின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபரான உப பொலிஸ் பரிசோதகர் படல்கும்புர ஐந்தாம் கட்டைப் பகுதியில் சடலமாக கண்டெடுக்கப்பட்டார்.

அவர் 52 வயதுடைய புத்தளம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய உப பொலிஸ் பரிசோதகர் என விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அத்துடன் குறித்த நபர் விஷமருந்தி உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேநேரம், இந்த சம்பவத்தில் உயிரிழந்த பெண் குருவிட்ட பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய திருமணமாகாத பெண் என்றும் அவர் தெரிவித்தார். (நி-4)

# பதுளை-நாரங்கல மலைக்குச் செல்ல மீள் அறிவித்தல் வரை தடை



(பதுளை)

பதுளை - நாரங்கல-கந்த (மலை) பகுதிக்குச் செல்ல மீள் அறிவித்தல் வரையில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் அங்கு சென்ற சுற்றுலாப் பயணிகள் சூழலை மாசுபடுத்தியமை, சுற்றுலாக் குழுக்கள் இரவு வேளையில் தங்கியிருந்து மேற்கொள்ளும் முறைகேடுகளைத் தவிர்க்கும் வகையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பதுளை மாவட்டச் செயலாளர் தயா தமயந்தி பரணகம தெரிவித்தார்.

சுற்றாடல் பாதிப்புக்களை தவிர்ப்பதற்கான வழிமுறை வகுக்கப்பட்ட பின்னர் இந்த சுற்றுலாப் பகுதி மீண்டும் திறக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அன்புள்ள அம்மா

ஜப்பானிலிருந்து ஒருத்தர் எங்கள் ஊருக்கு வந்தாராம். எங்கள் ஊர்க்காரர் ஒருத்தரிடம் பேசிக் கொண்டிருந்தாராம். உங்களுக்கு எத்தனை குழந்தைகள் என்று விசாரிக்கின்றார். ஒரே ஒரு பெண் குழந்தை தான் என்று இவர் சொல்லியிருக்கின்றார். வயது என்ன? என்று கேட்டிருக்கின்றார். மூன்று வயது என்றார். பார்க்க வேண்டுமே என்றிருக்கின்றார்.

பள்ளிக்கூடம் போயிருக்கின்றார் என்றார் இவர். அந்த ஜப்பான்காரர் உடனே மலைத்துப் போய் நின்று விட்டாராம். என்னது மூன்று வயதிலேயே பாடசாலை அனுப்புகின்றீர்களா? என்றாராம்.

ஆமாம் அவ எல்.கே.ஜி.படிக்கிறார். அதுசரி உங்கள் ஊரிலே இந்த வயதிலே பாடசால்ல அனுப்ப மாட்டீர்களா? என்று கேட்டாராம் இவர்.

எங்கள் ஊரிலேயெல்லாம் ஏழு அல்லது எட்டு வயதிற்கு மேலே தான் பாடசாலைக்கு அனுப்புவோம் என்றாராம் அவர்.

இப்பொழுது இவருக்கு ஆச்சரியம். இதற்குப் பிறகு அவர் விளக்கமாக பேசியிருக்கின்றார். சின்னக் குழந்தைகளின் மனது பக்குவப்பட்ட பிறகு தான் பாடசாலைக்கு அனுப்பு வோம். அந்த வயதிலே அவர்களுக்கு பாடசாலை போக வேண்டும் என்கின்ற ஆர்வம் உண்டாகும்.

ஏழு வயது வரைக்கும் அந்தப் பிஞ்சு மனது அன்பையும், நட்பையும் , பிற மனித அறிமுகங்களையும் தான் அதிகமாக எதிர்பார்க்கும். ஒரு குழந்தை எவ்வளவு நேரம் அவர்கள் அம்மாவுடன் இருக்கின்றது.

அதேமாதிரி எவ்வ ளவு நேரம் வீட்டிலே உள்ள மற்றவர்கள், அக்கம் பக்கத்திலே உள்ளவர்கள் இவர்களோடு செலவழிக்கின்றது.

இதைப் பொறுத்துத்தான் அந்தக் குழந்தையினுடைய மனது விசாலமடையுதாம். அறிவிலே அந்த வயதுக்கு ஏற்ற முதிர்ச்சி ஏற்படுகின்றது.

வீட்டிலே இருக்கக் கூடிய குழந்தை அந்த வயதுக்குள்ளே தன் வீட்டைப் புரிந்து கொள்கின்றது. வீட்டிலே உள்ள மனிதர்களைப் புரிந்து கொள்கின்றது. இன்னமும் பல விபரங்களைப் புரிந்து கொள்கின்றது.

இது மாதிரி ஒரு சூழ்நிலை பாடசாலையில் கிடைக்காது. அங்கே எல்லோரும் ஒரே மாதிரியாகத்தான் நடத்தப்படுகின்றார்கள். ஒரு குழந்தைக்கு என்று தனியான கவனம் செலுத்துவது என்பது அங்கே சாத்தியமில்லை.

வீட்டிலே இருக்கின்ற குழந்தை எல்லாரிடமும் சகஜமாகப் பழகக் கற்றுக் கொள்கின்றது. வீட்டுச் சூழலை மறக்க வெளியே எங்கேயாவது போகலாம் என்கின்ற எண்ணமும் அதற்கு உண்டாகின்றது.

புதிதாக பல பேரையும் பார்க்க வேண்டும், பழக வேண்டும் என்கின்ற ஆசையும் ஏற்படும். அதோடு மனம் விசாலமடைகின்றது. இதெல்லாம் அந்தக் குழந்தையின் ஏழு வயதுக்குள்ளே ஏற்படுகின்ற சமாச்சாரங்கள். இப்படி அந்த குழந்தை பக்குவம் அடைந்த பிறகு பாடசாலையிலே சேர்க்கிறதுதான் முறை. அதை விட்டுவிடு.

ஒரு குழந்தை என்ன ஏது என்று தெரிந்து கொள்வதற்கு முன்னரே பாடசாலையில் போட்டு அந்த குழந்தை மனதுக்கு ஒவ்வாத சமாச்சாரங்களையெல்லாம் அது மூளைக்குள்ளே திணித்து மென்மையான அதன் உணர்வுகளை சிதைத்துவிடக் கூடாது.

இவ்வளவும் அந்த ஜப்பான்காரர் சொன்ன கருத்து. எங்கள் ஊருக்கு இது எந்த அளவுக்கு சரியாக வரும் என்கின்றது ஒரு பக்கம் இருந்தாலும். இது நாம் எல்லோரும் சிந்திக்க வேண்டிய கருத்து. ஏன் என்றால் குழந்தை உளவியல் நிபுணர்கள் என்ன சொல்கின்றார்கள் தெரியுமா?

இளம் வயதிலே அன்பும் அரவணைப்பும் மிகவும் முக்கியமாம். அதைப் பொறுத்துத் தான் அவர்களுடைய எதிர்காலம் அமையுமாம்.

சின்ன வயதிலே தாயின் அரவணைப்பிலே வளருகின்ற குழந்தைகள் தான் பிற்காலத்திலே மிகவும் நல்ல நிலைமைக்கு வருகின்றார்களாம். ஒரு குழந்தை நல்லபடியாக வளர வேண்டும் என்றால் நல்ல ஆகாரம் மட்டும் கொடுத்தால் போதாது. அன்பான அரவணைப்பும் மிகவும் அவசியம்.

இதைப் பற்றி நிறைய ஆராய்ச்சி யெல்லாம் செய்து பார்த்திருக்கின்றார்கள். சில அநாதை ஆசிரமங்களிலே நல்ல ஆகாரம் கொடுத்து வளர்கின்ற குழந்தைகள் கூட சரியாக வளருகின்றதில்லையாம். ஏன் என்றால் அந்த குழந்தைகளைத் தொட்டு, சீராட்டி, கொஞ்சி, பேசுவதற்கு யாரும் இல்லாதது தான் குறை.

அதனால் எங்கள் ஊர் தாய்மார்களுக்கு ஒரு வேண்டுகோள். சின்ன வயதிலேயே குழந்தையை அன்பு அரவணைப்போடு வளருங்கள். அவர்களை ஒரு பக்கம் விட்டுவிட்டு நீங்கள் ஒரு பக்கம் போய்விடாதீர்கள். அப்படி போய் விட்டுவிட்டீர்கள் என்றால் குழந்தை வேறு விதமாகத்தான் இருக்கும்

ஒரு குழந்தை சொன்னதாம்...

நானும் எங்கள் அப்பாவும் தினமும் ஹோட்டலில் தான் சாப்பிடுவோம் என்று.

ஏன் உங்கள் வீட்டிலே உங்கள் அம்மா சமைக்கிறதில்லையா? என்று கேட்டிருக்கின்றார்கள்.

எங்கள் வீட்டிலே தினமும் எங்கள் அம்மா சமைக்கிறார். அதனால் தான் நாங்கள் ஹோட்டலில் சாப்பிடுகின்றோம் என்றதாம் அந்தக் குழந்தை.

# அமெரிக்காவின் சிக்கல் நிறைந்த ஜனாதிபதித் தேர்தல் முறைமையும் சர்ச்சைகள் நிறைந்த ஜோ பிடனின் பதவிப் பிரமாணமும் -2021

20




கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.




டொனால்ட் ட்ரம்ப், வெள்ளை மாளிகையிலிருந்து வெளியேறி மரைன் ஒன்று ஹெலிகொப்டரை நோக்கி

**2021, ஜனவரி 20 ஆம் திகதி**

தேர்தல் தொடர்பான அனைத்துச் செயற்பாடுகளும் முடிந்து, 2021 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி பதவி ஏற்றுக்கொள்வார். இந்த நாளில் நண்பகலுக்குள், புதிய ஜனாதிபதி பதவிக்காலம் தொடங்குகிறது என்று அரசியலமைப்புக் கூறுகிறது. இம்முறை கொரோனாவால் இது சுமுகமாக ஆடம்பரமில்லாமல் நடந்து முடிந்தது. இது பற்றிப் பார்ப்போம்.



46 ஆவது அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடனின் பதவியேற்பு



துணை ஜனாதிபதியாக கமலா ஹாரிஸ் பதவியேற்பு

**அமெரிக்காவில் புதிய ஜனாதிபதி, துணை ஜனாதிபதி பதவி ஏற்பு விழா,**

அந்த மரபுப்படி, தலைநகர் வோஷிங்டனில் அமைந்துள்ள பாராளுமன்ற கட்டடத்தின் மேற்கு பகுதியில் புதிய ஜனாதிபதி, துணை ஜனாதிபதி பதவி ஏற்பு விழா ஜனவரி 20 ஆம் திகதி அமெரிக்க நேரப்படி காலை சுமார் 11 மணிக்கு கோலாகலமாகத் தொடங்கியது.

கொரோனா வைரஸ் பெருந்தொற்று காலம் என்பதால், அதற்கான கட்டுப்பாடுகள் கடைப்பிடிக்கப்பட்டன. அனைவரும் முகக்கவசம் அணிந்திருந்தது குறிப்பிடத்தக்கது. பதவி ஏற்பு விழா, ஜோ பிடன் குடும்பத்தினருக்கு நெருக்கமான ஏசு சபை போதகர் லியோ ஜெரேமியா ஓ டொனோவன் பிரார்த்தனையுடன் தொடங்கியது.

அமெரிக்காவின் 46 ஆவது ஜனாதிபதியாக ஜோ பிடனுக்கு அந்த நாட்டின் சிறப்பு நீதிமன்றம் தலைமை நீதிபதி ஜோன் ராபர்ட்ஸ் ஜனவரி 20 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

ஜோ பிடன் 127 ஆண்டு கால பாரம்பரியம் கொண்ட குடும்ப பைபிளை அவரது மனைவி ஜில் பைடன் கையில் பிடித்திருக்க, அதன் பேரில் பதவி ஏற்றுக்கொண்டார்.

**அமெரிக்காவின் 46 ஆவது ஜனாதிபதியாக ஜோ பிடனுக்கு, அந்த நாட்டின் சிறப்பு நீதிமன்ற தலைமை நீதிபதி ஜான் ராபர்ட்ஸ் ஜனவரி 20 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். ஜோ பிடன் 127 ஆண்டு கால பாரம்பரியம் கொண்ட குடும்ப பைபிளை அவரது மனைவி ஜில் பைடன் கையில் பிடித்திருக்க, அதன் பேரில் பதவி ஏற்றுக்கொண்டார்.**

அதேபோன்று அமெரிக்காவின் 49 ஆவது துணை ஜனாதிபதியாக கமலா ஹாரிசுக்கு அந்த நாட்டின் சிறப்பு நீதிமன்ற நீதிபதி சோனியா சோட்டாமேயர் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். கமலா ஹாரிஸ், தனது நெருங்கிய குடும்ப நண்பரான ரெஜினா ஷெல்டன் மற்றும் அமெரிக்க உச்ச நீதிமன்றம் முதல் ஆபிரிக்க வம்சாவளி நீதிபதி துர்கூட் மார்ஷல் ஆகியோருக்கு சொந்தமான 2 பைபிள்களின் பேரில் பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

**அமெரிக்காவின் 49 ஆவது துணை ஜனாதிபதியாக கமலா ஹாரிசுக்கு அந்த நாட்டின் சிறப்பு நீதிமன்ற நீதிபதி சோனியா சோட்டாமேயர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.**

இந்தப் பதவி ஏற்பு விழா முன் எப்போதும் இல்லாத வகையில் 25 ஆயிரம் தேசிய பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்பில் நடைபெற்றது. விழாவில், முன்னாள் ஜனாதிபதிகள் ஒபாமா, ஜோர்ஜ் புஷ், பில் கிளிண்டன், அவர்களது மனைவிமார் மிச்செல் ஒபாமா, லாரா புஷ், ஹிலாரி கிளிண்டன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் பதவி ஏற்பு விழாவில், விடைபெற்றுச்சென்ற ஜனாதிபதியான ட்ரம்ப் கலந்து கொள்ளவில்லை. வழக்கமாக புதிய ஜனாதிபதியை முன் வாசல் வழியாகப் பதவியை இழக்கும் ஜனாதிபதி வரவேற்பார்.

ஆனால், இந்நிகழ்வில் டொனால்ட் ட்ரம்ப் கலந்து கொள்ளவில்லை. 1869 இற்கு பின் தமக்கு பின் பதவியேற்பவரின் நிகழ்வில் கலந்துகொள்ளாத முதல் ஜனாதிபதி ட்ரம்ப் ஆவார்.

**புதிய ஜனாதிபதி பதவி ஏற்பு விழாவில் விடைபெற்றுச் சென்ற ஜனாதிபதியான ட்ரம்ப் கலந்து கொள்ளவில்லை. வழக்கமாக புதிய ஜனாதிபதியை முன் வாசல் வழியாக பதவியை இழக்கும் ஜனாதிபதி வரவேற்பார். ஆனால், இந்நிகழ்வில் டொனால்ட் ட்ரம்ப் கலந்து கொள்ளவில்லை. 1869 இற்குப் பின் தமக்குப் பின் பதவியேற்பவரின் நிகழ்வில் கலந்து கொள்ளாத முதல் ஜனாதிபதி ட்ரம்ப் ஆவார்.**

இருப்பினும் அவர், "நாங்கள் எங்கள் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவர்களுக்கு அதிர்ஷ்டம் வாய்க்கவேண்டும். இது முக்கியமான வார்த்தை" எனக் கூறி வாழ்த்துத் தெரிவித்தார். அவர் அத்துடன் வோஷிங்டனில் இருந்து புளோரிடாவுக்குப் புறப்பட்டு சென்றார். அதேநேரத்தில் விடைபெற்றுச்சென்ற துணை ஜனாதிபதி மைக் பென்ஸ், விழாவில் கலந்து கொண்டார். பொது மக்களுக்குப் பதிலாக அமெரிக்க தேசிய கொடிகள் இடம் பெற்றிருந்தன. விழாவில் பிரபல பாடகி லேடி காகா என்று அழைக்கப்படுகிற ஸ்டெபானி ஜோன் ஏஞ்சலினா ஜேர்மனோட்டா தேசிய கீதம் பாடினார். பதவி ஏற்பு விழா முடிந்ததும் ஜனாதிபதி ஜோ பிடன் நாட்டு மக்களுக்கு உரை ஆற்றினார்.

**ஊதா நிற உடை அணிந்த முக்கிய பிரமுகர்கள்**

புதிய ஜனாதிபதி பதவியேற்பு விழாவில் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் உள்ளிட்ட பல முக்கிய நபர்கள் ஊதா நிற ஆடையை அணிந்திருந்தனர். இரு கட்சியும் ஒன்றிணைக்கும் வண்ணமாக ஊதா நிறம் பார்க்கப்படுகிறது.

குடியரசு மற்றும் ஜனநாயக கட்சிகளின் நிறமான முறையே சிவப்பு மற்றும் நீல நிறத்தை சேர்த்தால் ஊதா நிறம் வெளிப்படும். இந்த பதவியேற்பு விழாவின் உரைப்பொருள் (theme) "ஒற்றுமைப்பட்ட அமெரிக்கா (America United)" என்பதைக் குறிக்கும் விதமாகவே பலரும் ஊதா நிற ஆடையை அணிந்து வந்திருந்தனர்.

**ஜோ பிடனுக்கு உலக நாடுகளின் தலைவர்கள் வாழ்த்து**

அமெரிக்காவின் 46 ஆவது ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுள்ள ஜோ பிடனுக்கு இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜோன்சன், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான், இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, கனடா பிரதமர் ஜஸ்டின், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், ஜப்பான் பிரதமர் யோஷிகிடே சுகோ உட்பட பல்வேறு உலக நாடுகளின் தலைவர்களும் வாழ்த்துத் தெரிவித்தனர். அமெரிக்கா உடனான உறவு வலுப்பெறும் எனவும் அமெரிக்க மக்களுக்கு மிகவும் குறிப்பிடத்தக்க நாள் எனவும் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

(முற்றும்)

# மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சராக ரொஷான் பதவியேற்பு



(கொழும்பு)

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சராக ரொஷான் ரணசிங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று முன்தினம் முற்பகல் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கொழும்பிலுள்ள மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

மகாசங்கத்தினரது ஆசீர்வாதத்திற்கு மத்தியில் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தனது அமைச்சின் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன் - எதற்கு - எப்படி

## திருமண யோகம் தரும் தெய்வத் திருமணங்கள்!

(தொடர்ச்சி)

ஆனால் கும்பாபிஷேகம் நடத்தும் போது செய்யப்படும் திருக்கல்யாணமும் ஆண்டுக்கு ஒரு தடவை நடத்தும் திருக்கல்யாணமும் வேறு வேறு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆண்டுக்கு ஒரு தடவை இறைவன் இறைவிக்கு நடத்தப்படும் திருக்கல்யாணம் ஆலயத்துக்கு ஆலயம் மாறுபடும்.

ஒவ்வொரு ஆலயத்திலும் உள்ள இறை மூர்த்தத்துக்கு ஏற்ப திருக்கல்யாணம் நடத்தப்படும். சிவாலயங்கள் என்றால் மதுரையில் மீனாட்சி - சுந்தரேசுவரர், காஞ்சிபுரத்தில் ஏகாம்பேஸ்வரர் - காமாட்சி என்று நடைபெறும். அதுபோல வைணவத் தலங்கள் என்றால் ஸ்ரீரங்கம் என்றால் ரங்கமன்னாருக்கும் ஆண்டாளுக்கும் திருமணம் நடைபெறும்.

இறைமூர்த்தி ராமபிரானாக இருந்தால் அந்த ஆலயத்தில் சீத்தாராம கல்யாணம் நடத்துவார்கள். மூலவர் கண்ணனாக இருந்தால் கண்ணனுக்கும் ருக்குமணிக்கும் திருமணம் நடைபெறும்.

இத்தகைய திருமணங்களை நடத்த ஊருக்கு ஊர் பழக்கவழக்கம் வித்தியாசமாக இருக்கும். அந்த வகையில் பழமை மரபு மாறாமல் பல நூற்றாண்டுகளாக மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் திருக்கல்யாணம் நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது.

இந்த விழாவில் மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலய அர்ச்சகர்களே ஆண் - பெண் வேடமிட்டு திருக்கல்யாணத்தை நடத்துவார்கள்.

இந்தச் சேவைக்காகவே இக்கோவிலில் இரண்டு விதமான அர்ச்சகப் பரம்பரையினர் காலம் காலமாகப் பணிபுரிந்து வருகிறார்கள்.

குலசேகர பட்டர் பரம்பரையைச் சேர்ந்த அர்ச்சகர் மாப்பிள்ளை வேடம் ஏற்பார். உக்கிரப்பாண்டி பரம்பரையைச் சேர்ந்த அர்ச்சகர் மணமகள் வேடம் ஏற்பார். அவர்களை இறைவன் இறைவியாகக் கருதி திருக்கல்யாணம் நடத்தப்படும்.

விழாவின் தொடக்கமாக விக்னேசுவர பூஜை நடத்துவார்கள். பிறகு பிரம்ம ஹோமம், மாங்கலய பூஜைகள் நடைபெறும். இதைத் தொடர்ந்து மீனாட்சி சுந்தரேசுவரருக்குக் காப்புக் கட்டுவார்கள்.

அதன்பிறகு திருக்கல்யாணத்தின் முக்கியச் சடங்கான மங்கல நாண் அணிவிக்கும் நிகழ்ச்சியும் மாலை மாற்றும் நிகழ்ச்சியும் நடைபெறும். இறைவிக்குத் திருமாங்கல்யம் கட்டப்படும் போது பெண்கள் தாங்களும் தங்களுக்குத் திருமாங்கல்யத்தை அணிந்து கொள்வார்கள்.

மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் திருக்கல்யாணம் நடைபெறும்போது திருமால் கன்னிகாதானம் செய்து வைக்க பிரம்மன் வேள்வி நடத்த சொக்கநாதரான சிவன் மீனாட்சியம்மையை மணக்கிறார்.

திருமண வைபவத்தில் கன்னிகாதானம் அளிக்கும் சடங்குதான் முக்கியமானது. அதை மதுரை தலத்தில் சிறப்புறக் காணலாம்.

இந்தத் திருக்கல்யாணத்தில் போது பக்தர்கள் இறைவன் இறைவிக்குப் பட்டுப்புடவைகள், திருமாங்கல்யம் மற்றும் மொய்ப்பணம் கொடுப்பது வழக்கமாக உள்ளது.

கோவில் சார்பாக திருமாங்கல்யம், மஞ்சள் கிழங்கு, விபூதி, குங்குமம் கொண்ட பிரசாத பையைப் பக்தர்களுக்குக் கொடுப்பார்கள். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## 266 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

டுபாய்க்குத் தொழில்வாய்ப்புகளுக்காகச் சென்று அங்கு பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கிய நிலையில் 266 இலங்கையர்கள் மீண்டும் நாடு திரும்பியுள்ளனர்.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விமானம் ஒன்றின் ஊடாக அவர்கள் நாட்டை வந்தடைந்தனர். அவர்கள் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். (நி-4)

## துப்பாக்கியுடன் தோட்டாக்களும் விசேட அதிரடிப்படையால் மீட்பு

(கொழும்பு)

உடப்பு - பெருக்குவாட்டான் பகுதியிலுள்ள தென்னந்தோட்டமொன்றில் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட தன்னியக்க துப்பாக்கி ஒன்றையும் ஒரு தொகுதி தோட்டாக்களையும் விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர்.

இதன்போது சிலாபம் சிங்கபுர வீதியில் வசிக்கும் 63 வயதுடைய குறித்த தென்னந்தோட்ட உரிமையாளரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

உடப்பு பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

## விசா இன்றி தங்கியிருந்த ஒருவர் கைது

(கொழும்பு)

முந்தல் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரஹ்மத் கிராமம் பிரதேசத்தில் விசா இன்றி தங்கியிருந்த வெளிநாட்டவர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவைச் சேர்ந்த 60 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முந்தல் பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில், குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதலின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 60 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 160 | 200 | 250 |
| தக்காளி | 250 | 200 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 | 40 |
| கோவா | 160 | 120 | 200 |
| கரட் | 150 | 200 | 240 |
| பூசணி | 80 | 70 | 80 |
| புடோல் | 160 | 120 | 100 |
| வாழைக்காய் | 50 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 200 | 220 | 240 |
| பெரிய வெங்காயம் | 180 | 130 | 200 |
| பாகற்காய் | 180 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 200 | -- | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | 120 |
| பயற்றங்காய் | 140 | 180 | 160 |
| லீக்ஸ் | 100 | 130 | 140 |
| பீற்றூட் | 100 | -- | 100 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 120 | 120 | 240 |
| கத்தரிதம்புள்ள | 50 | 80 | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 160 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 80 | 80-100 |
| இராசவள்ளி | 250 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 140 | 200 |
| முள்ளங்கி | 60 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 |
| வல்லாரை | 40 | 30 | 30 |
| ஈரப்பலா | 130 | 100 | 80 |

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பம்

(நல்லூர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உடற்கல்வி டிப்ளோமாக் கற்கை நெறி ஆரம்ப அறிமுக நிகழ்வு நேற்று இடம்பெற்றது. யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சி. சபானந் தலைமையில், கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, இணை மருத்துவ விஞ்ஞானபீடாதிபதி கலாநிதி தெய்வி தபோதரன், விளையாட்டு விஞ்ஞான அலகின் தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கு. கேதீஸ்வரன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் கற்கை நெறிக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் உட்படப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழகத்தின் இணை மருத்துவ விஞ்ஞான பீடத்தின் கீழ் உடற்கல்வி விஞ்ஞான மாணிக் கற்கைநெறியை ஆரம்பிப்பதற்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அதன்படி, இணை மருத்துவ விஞ்ஞான பீடத்தின் கீழ் விளையாட்டு விஞ்ஞான அலகு, புதிய துறையாக உள்வாங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகினால் நடத்தப்பட்டு வந்த உடற்கல்வி டிப்ளோமாக் கற்கை நெறியை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 92 விளையாட்டுப்பயிற்றுவிப்பாளர்கள் இந்த உயர் டிப்ளோமா கற்கை நெறிக்கு உள் வாங்கப்பட்டுள்ளனர்.

1998ஆம்ஆண்டு யாழ்.பல்கலைக்கழகத்தின் அப்போதைய துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையினால் உடற்கல்வி டிப்ளோமாக் கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

ஆரம்ப காலங்களில் அந்தக் கற்கைநெறி மருத்துவ பீடம், வணிக முகாமைத்துவ பீடம் ஆகியவற்றின் கீழ் மாறி, மாறிச் செயற்படுத்தப்பட்டது. இரண்டு வருட காலத்தைக் கொண்ட டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களை, மூன்றாம் வருடத்தில் உடற்கல்வி மாணிப் பட்டதாரிகளாகப் பயிற்றுவதற்குப் பல்கலைக்கழக நிர்வாகம் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், தவிர்க்க முடியாத காரணங்களால் அது சாத்தியப்படாமல் போனது.

விஞ்ஞான பீடத்தின் கீழும், கலைப் பீடத்தின் கீழும் உடற்கல்விமாணிப் பட்டப்படிப்பை ஆரம்பிப்பதற்கான முன் மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் கடந்த காலங்களில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அவை அங்கீகரிக்கப்படவில்லை.

கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் புதிய துணைவேந்தராக பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பதவியேற்ற பின்னர், பல்கலைக்கழகத்தின் இணை மருத்துவ விஞ்ஞான பீடத்தின் கீழ் உடற்கல்வி விஞ்ஞானமாணிப் பட்டப்படிப்பை நடத்துவதற்காக மூதவை, பேரவை ஆகியவற்றின் அங்கீகாரத்துடன் உடற்கல்வி விஞ்ஞானமாணி பட்டப் படிப்புக்கான முன்மொழிவு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக் கப்பட்டிருந்தது.

அந்த முன்மொழிவு, கடந்த மாதம் 7 ஆம் திகதி இடம்பெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மாதாந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டு, அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அதன்படி க.பொ.த. உயர்தரத்தில் பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக் குறைந்த தேவைப்பாட்டை நிறைவு செய்த, விளையாட்டுத்துறையில் ஈடுபடுகின்ற மாணவர்களை உள்வாங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கிறமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (5-4-33)

# ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்திலும் அம்புலன்ஸ் வண்டி நிறுத்தப்பட வேண்டும்

## பிரதேச சபை உறுப்பினர்

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் அம்புலன்ஸினை (1990) நிறுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ச. சத்தியசுதர்சன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஒட்டுசுட்டான் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வண்டி முல்லைத்தீவிற்குச் சென்றாலோ திருத்தப்பணிகளுக்குச் சென்றாலோ ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலைக்குச் செல்லும் அவசர நோயாளர்கள் பெருஞ் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.


ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையினை நம்பியுள்ள 3,000 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் தொடர்ச்சியாக சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இலங்கையில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் 1990 அம்புலன்ஸ் வண்டி தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்திலும் அம்புலன்ஸ் வண்டியினை நிறுத்தி வைப்பதன் மூலம் ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள் இலகுவாக முல்லைத்தீவு பொது வைத்தியசாலைக்குச் செல்லக் கூடிய நிலைமை ஏற்படும் எனத் தெரிவித்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் காதர் மஸ்தான் முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரிடம் விடயங்களைக் கேட்டறிந்தார்.

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் அம்புலன்ஸ் வண்டியினை நிறுத்தி வைத்து மக்களுக்கு சேவை வழங்குவது தொடர்பாக பிரதேச சபை உறுப்பினரின் கோரிக்கை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளருக்கு தெரிவித்தார். (5-4-350)

# யாழ்.பல்கலை.வேந்தரின் சிறப்புரை



(நல்லூர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவின் ஒரு பாகமாக அமையும் பல்கலைக்கழக வேந்தரின் சிறப்புரை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைலாசபதி கலையரங்கில், துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பழங்காலப் பதிவுகளும் நிகழ்காலப் பார்வைகளும் - மகாவம்சமும் வரலாற்று நூல்களும் என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக வேந்தர், தகைசார் வரலாற்றுப் பேராசிரியர் எஸ். பத்மநாதன் சிறப்புரை ஆற்றினார்.

இந் நிகழ்வில், யாழ். இந்தியத் துணைத் தூதுவர் எஸ். பாலச்சந்திரன், தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (5-4-33)

# நாமிழந்த வாய்ப்புக்களை அடுத்த சந்ததியினர் பெறவேண்டும்

(சாவகச்சேரி)

நாங்கள் இழந்த வாய்ப்புக்கள் அனைத்தையும் எமது அடுத்த சந்ததியினர் அனுபவிக்க வேண்டும் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தென்மராட்சி - வரணி பிரதேசத்தில் உள்ள மைதானம் ஒன்றின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்கள் பிரதேசங்களைச் சேர்ந்த வீர வீராங்கனைகள் தேசிய மற்றும் சர்வதேச ரீதியான போட்டிகளில் பங்குபற்றுவது மிக அரிது என்ற ஆதங்கம் எங்கள் மத்தியில் உள்ளது.

எமது இளைஞர்களுக்கும் வளங்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் ஊடாக வாய்ப்புகளை உருவாக்க முடியும். இலங்கை கிரிக்கெட்டில் முதற்தடவையாக யாழ். இளைஞன் ஒருவர் தேர்வாகி யாழ் மண்ணிற்கு பெருமை தேடித் தந்துள்ளார்.

நாம் இழந்த அனைத்தையுமே எமது அடுத்த தலைமுறையினர் அனுபவிக்க வேண்டும்.

நகரில் உள்ள மக்களுக்கு சமனாக கிராம மக்களும் வாழ வேண்டும் என்ற நோக்கில் அரசாங்கத்தால் கிராமத்திற்கு ஓர் மைதானம் என்ற திட்டம் ஊடாக மைதானங்கள் புனரமைக்கப்பட்டு கிராமப்புற இளைஞர்களும்' ஊக்குவிக்கப்படுகின்றனர்.

கிராமப்புற மக்களுக்கும் சம வாய்ப்புக்கள், வசதிகள் கிடைக்க வேண்டும்.

அப்போது தான் ஒட்டு மொத்த நாட்டினையும் முன்னேற்ற முடியும்.

பல இழப்புக்களைத் தாண்டியும் பல்வேறு காரணிகளால் திசைமாறிச் செல்லும் இளைய சமுதாயத்தை நெறிப்படுத்தவும், முற்போக்கு சிந்தனை உள்ளவர்களாக அவர்களை மாற்றவும் விளையாட்டு உறுதுணையாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4-30)

எட்டாத கொப்புக்கு ஏணி வைத்துப் பூப்பறித்து – முட்டாத பூசை செய்தேன் – தங்கமே முன்னுமில்லை பின்னுமில்லை – நற்சிந்தனை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# மரத்துப்போன மனங்களும் இரக்கமற்ற செயல்களும்

தமிழ்ப் பண்பாடு என்பது இல்வாழ்வை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.

விருந்தோம்பல் எனும் அறத்தை தம் வாழ்வியலின் முதன்மையாகப் பின்பற்றிய தமிழ்ப் பண்பாட்டில், வீட்டின் வெளியில் அமைக்கப்பட்ட திண்ணை என்பது வீதியால் நடந்து செல்வோர் களைத்துப் போகின்ற சந்தர்ப்பங்களில் அந்தத் திண்ணைகளில் ஆற அமர தங்கியிருந்து செல்வதற்கானது.

இதுபோல வீட்டு வளவின் வெளிப்புறத்தில் தொட்டி அமைத்து அதற்குள் தண்ணீர் இறைத்து தெருவால் போகின்ற பசுக்கள் தண்ணீர் குடிக்கவும் தண்ணீர் குடித்த பசுக்கள் தங்கள் உடம்மை உரஞ்சிக் கொள்வதற்காக ஆவுரஞ்சுக் கல்லும் அமைக்கப்பட்டிருந்தன.

அந்தளவுக்கு தமிழர் வாழ்வியலில் ஜீவ காருண்யம் உயர்வு பெற்றிருந்தது.

இவ்வாறாக சமூக சிந்தனைகளும் ஜீவ காருண்யமும் நம் தமிழ்ப் பண்பாட்டில் மிகுந்திருந்தன.

அன்பையும் அறத்தையும் கடவுள் வழிபாட்டையும் எடுத்தியம்புவதற்கான கதைகளினூடு தமிழ்ச் சமூகம் ஒழுங்குபடுத்தப்பட்டது.

இதில் மன்னன் சாலமனுடைய காலத்து கதை இங்கு நோக்குதற்குரியது.

மன்னன் சாலமனின் சபைக்கு ஒரு விசித்திர வழக்கு வருகிறது.

ஒரு குழந்தை. இரண்டு தாய்மார். இருவருமே குழந்தை தம்முடையதென்கின்றனர்.

மன்னன் சாலமன் திகைத்துப் போகின்றான். ஒரு தாய்க்கு இரண்டு குழந்தைகள் இருக்க முடியும். ஆனால் இரண்டு தாய்க்கு ஒரு குழந்தை எப்படிச் சாத்தியமாகும்.

வழக்கை விசாரித்த மன்னன் சாலமன், பிள்ளையை ஆளுக்குப் பாதியாகக் கொடுக்க உத்தரவிட்டு தன் உடைவாளை எடுத்தான்.

அந்நேரத்தில் ஒரு தாய் மன்னா! வேண்டாம் என்று மன்னனைத் தடுத்து குழந்தையை மற்றைய பெண்ணிடம் கொடுக்குமாறு கூறுகின்றாள்.

அந்தத் தாயின் இரக்கம், அன்பு, பரிவு என்பவற்றைக் கண்ட மன்னன் சாலமன் உண்மையான தாய் யார் என்பதைத் தீர்மானித்துக் கொள்கிறான்.

உண்மைத் தாய் ஒருபோதும் தன் பிள்ளை வதைபடுவதை – வெட்டப்படுவதை அனுமதிக்க மாட்டாள்.

இவ்வாறாக தாயின் அன்பை வெளிப்படுத்துகின்ற சம்பவங்கள் நிறையவே உண்டு.

ஆனால் அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஒரு தாய் தான் பெற்ற எட்டு மாதப் பச்சிளம் குழந்தையைக் கண்டபாட்டில் அடித்துத் துன்புறுத்திய சம்பவம் சமூகவலைத்தளங்களில் வெளியானபோது, அதனைப் பார்த்தவர்கள் ஐயகோ! இஃது என்ன கொடுமை என்று மனம் பேதலித்துப் போயினர்.

அந்தளவுக்கு ஈவு இரக்கமற்ற செயலை ஒரு தாய் செய்தாள் எனும்போது, மனங்கள் வக்கிரத்து, ஈவு இரக்கம் இல்லாமல் போய்விட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

என்ன செய்வது, தாய்மையின் உன்னதத்தை உணராதவர்கள் தாய்மையாவது தாய்மைக்கு இழுக்கைத் தேடித் தந்துவிடுகிறது என்பதைத் தவிர வேறு எதனைத்தான் நாம் இங்கு சொல்ல முடியும்

# பெண் தலைமையில் யாழில் நூதன கொள்ளை

## முச்சக்கரவண்டி சாரதிகளே இலக்கு

(யாழ்ப்பாணம்)

யாழில்.பெண் தலைமையில் நூதன கொள்ளையில் ஈடுபடும் கொள்ளையர்கள் தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த கொள்ளை கும்பல் முச்சக்கர வண்டி சாரதிகளை இலக்கு வைத்தே கொள்ளையில் ஈடுபட்டு வருகின்றது.

இது குறித்து தெரிய வருவதாவது ,

யாழ்.புறநகர் பகுதிகளான காக்கை தீவு , பொம்மைவெளி , ஓட்டுமட பகுதிகளில் வீதியில் நிற்கும் பெண் ஒருவர் வீதியால் வரும் முச்சக்கர வண்டிகளை மறித்து நகர் பகுதிக்கு செல்ல வேண்டும் என முச்சக்கர வண்டிகளை வாடகைக்கு அமர்த்துவார்.

பின்னர் பொம்மைவெளி பகுதியில் தனது உறவினர் வீடு ஒன்று உள்ளதாகவும் , அங்கு முதலில் சென்று விட்டு நகருக்கு செல்வோம் என கூறி பொம்மைவெளி பகுதியில் உள்ள வீடொன்றுக்கு அழைத்து செல்வார்.

அங்கு சென்றதும் அவர் முதலில் அந்த வீட்டிற்குள் சென்று விட்டு , சில நிமிடத்தில் ஏதேனும் காரணம் கூறி முச்சக்கர வண்டி சாரதியையும் வீட்டிற்குள் அழைப்பார். சாரதி வீட்டிற்குள் சென்றதும் வீட்டினுள் இருக்கும் இளைஞர்கள் , சாரதி அந்த பெண்ணுடன் தவறான நோக்குடன் நடந்து கொள்வதற்கு வீட்டினுள் அத்துமீறி நுழைந்ததாக குற்றம் சாட்டி சாரதியை மிரட்டி பணத்தினை கொள்ளையிடுவார்கள்.

இந் நிலையில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இவ்வாறு ஓர் முச்சக்கர வண்டி சாரதியை வீட்டினுள் அழைத்து சென்று அங்கிருந்த இளைஞர்கள் சாரதி மீது தாக்குதல் மேற்கொண்டு அவரது தங்க சங்கிலி மற்றும் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணம் என்பவற்றை கொள்ளையடித்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸ் உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்டவர் கோரியுள்ளார். (ம-3-33)

# ராஜபக்ஷ அரசாங்கம் மக்களை ஏமாற்றியுள்ளது

## கபீர் ஹாசீம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ராஜபக்ஷ அரசாங்கம் மக்களை ஏமாற்றியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவிதுள்ளார் .கொழும்பில் நேற்றைய தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். உயிர்த்த ஞாயிறு தற் கொலைத் தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் குறித்து விசாரணை செய்து தண்டனை வழங்குவதற்கு அரசாங்கம் இது வரையில் நடவடிக்கை எடுக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதியும் பிரதமரும் உறுதிமொழி வழங்கிய போதிலும் இதுவரையில் அர்த்தபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

# திருவள்ளுவரின் சிந்தனைகள்

## நன்றி மறப்பது நன்றன்று



❖ காலத்தினால் செய்த உதவி சிறிதாக இருந்தாலும், பயனை எதிர்பார்க்காமல் செய்த உதவி உலகத்தைவிட பெரியதாகும்.

❖ இல்லறத்தில் சிறந்து வாழ்பவன் கடவுள் நிலையில் வைத்து மதிக்கப்படுவான்.

❖ அன்பைப் பூட்டி வைக்க முடியாது. வேண்டப்பட்டவர்கள் துன்பமடைந்தால், அது தானே வெளிப்பட்டு விடும்.

❖ தூய்மையான நிலை என்பது ஆசையை வெறுத்த நிலையாகும். இறைவனை விரும்புவதால் மட்டுமே இந்தநிலை கிடைக்கும்.

❖ ஒருவர் செய்த உதவியை மறப்பது நல்லதல்ல. ஆனால், தீமையை உடனே மறந்துவிட வேண்டும்.

❖ மனதை அதன் வழியில் செல்லவிடாமல், தீமையில்இருந்து அகற்றி நல்ல வழியில் செல்லவிட வேண்டும்.

❖ அறிவுடையவர்கள் மட்டுமே எதிர்கால நிகழ்ச்சிகளை ஆராய்ந்து உணரும் சக்தி பெறுகி ன்றனர்.

❖ அழிவுவராமல் காக்கும் கருவி அறிவு. இது பகையால் எதிர்ப்பவர்க்கும் அழிக்க இயலாத உள் அரண் போன்றதாகும்.

❖ பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் நான்கும் தம்மைச் சேராதபடி வாழ்வு நடத்துதலே தர்மம்.

# கறுப்பு ஞாயிறு தின போராட்டத்திற்கு ஆதரவு

## ஜே.வி.பி. அறிவிப்பு


(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி அனுஷ்டிக்கப்படவுள்ள கறுப்பு ஞாயிறு தின போராட்டத்துக்கு ஆதரவளிப்பதாக ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

தாக்குதலுக்குப் பின்னால் உள்ள சூத்திரதாரிகளை வெளிப்படுத்தவும் தவறு செய்தவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கவும் தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்கவும் அரசாங்கத்தையும் சட்ட அமுலாக்க அதிகாரிகளையும் கேட்டுக்கொள்வதாக தேசிய மக்கள் சக்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. (நி-4)

# சத்திய தரிசனம்

## நல்லவற்றைக் காண்போம்



❖ பெற்றோருக்கு மதிப்பளியுங்கள். அப்போது தான் எதிர்காலத்தில் நீங்கள் பெற்றோராகும்போது பிள்ளைகள் உங்களை மதிப்பார்கள்.

❖ பெற்றோரை மனிதர்களாக மட்டுமல்லாது, நடமாடும் தெய்வங்களாகவும் மதித்து நடக்க வேண்டும்.

❖ உடல் படகு போன்றது. வாழ்வோ ஓடும் ஆறு போன்றது. ஆற்றைக் கடந்து அக்கரை சேரும் வரை படகு ஓட்டையாகி விடாமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

❖ நல்லவற்றைக் காண்பதே கண்களின் பணியாக இருக்கட்டும். நல்லதைக் கேட்பதே காதுகளின் செயலாக இருக்கட்டும்.

❖ உங்களிடமுள்ள குற்றங்களைக் கண்டுபிடித்து திருத்திக் கொள்ளுங்கள். மற்றவர்களிடம் உள்ள குணங்களை தேடிப் பாராட்டி மகிழுங்கள்.

❖ உண்மையும், பொய்யும் கலந்த கலவையாக உலகம் இருக்கிறது. எப்போதும் சிந்தித்து செயலாற்றி உண்மையின் பக்கம் வாழ்வை அமைத்துக் கொள்ளுங்கள்.

## அரசாங்கம் மீது கடும் அதிருப்தி பெரும் நெருக்கடிகளை சந்திக்கும் சுகாதார பரிசோதகர்கள்

(கொழும்பு)

அரசாங்கத்தின் செயற்பாடுகள் மீது பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

கொவிட் காரணமாக உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வது குறித்த அரசாங்கத்தின் அறிவிப்பு குறித்து பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கூடுதல் கரிசனை கொண்டுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஒன்றியத்தின் செயலாளர் எம். பாலசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கம் கிரமமான திட்டங்களை நடைமுறைப்படுத்தாது சில அறிவிப்புக்களை மேற்கொள்வதனால் தமக்கு பெரும் சிக்கல்கள் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

## போதைப்பொருள் பயன்படுத்தும் சாரதிகளை அடையாளங்காண புதிய வேலைத்திட்டம்

(கொழும்பு)

**போதைப்பொருள் பயன்படுத்தும் சாரதிகளை அடையாளம் காணும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம் தீர்மானித்துள்ளது.**

கனரக வாகன சாரதிகள் மற்றும் பயணிகள் பேருந்து சாரதிகள் போதைப்பொருளை பயன்படுத்துவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதென போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் தலைவர், வைத்தியர் ஷவிந்திர கமகே தெரிவித்துள்ளார்.

இதனால், பாதசாரிகள் மற்றும் பயணிகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

போதைப்பொருளை பயன்படுத்தும் சாரதிகளை அடையாளம் காண்பதற்கு, சிறப்பு உபகரணங்கள் மற்றும் அத்தகைய சாரதிகளுக்கு எதிராக பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு ஏற்ப தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் தலைவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் சில மாதங்களுக்குள் புதிய நடைமுறைகள் முன்னெடுக்கப்படும் எனவும் வைத்தியர் ஷவிந்திர கமகே மேலும் தெரிவித்தார். (நி-4)

## தமிழ், முஸ்லிம்களுக்கு இடையிலான உறவை சீர்குலைக்கவே இடத்தேர்வு பிரச்சினை

(கொழும்பு)

முஸ்லிம் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறையை ராஜபக்ஷ அரசாங்கம் இன்னும் கைவிடவில்லை என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

வலது கையில் கொடுப்பது போல நடித்துவிட்டு, அதனை இடது கையால் பறிக்கும் நய வஞ்சக அரசியலையே இந்த அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது என சுட்டிக்காட்டினார்.

தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் வலுப்பெற்ற நல் உறவை சீர்குலைக்கும் வகையில் தற்போது 'இடத்தேர்வு' பிரச்சினையை அரசு கிளப்பியுள்ளது.

ஜனநாயக மக்கள் முன்னணியின் கண்டி மாவட்ட அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற விசேட கலந்துரையாடலொன்றில் பங்கேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டினார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "கொரோனா வைரஸின் கோரத்தாண்டவத்தை எவ்வாறு விரைவில் கட்டுப்படுத்தி, நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டுவர முடியும் என உலக நாடுகள் கவனம் செலுத்திய நிலையில், கொரோனாவில் கூட அரசியல் நடத்தி, பேரினவாதிகளை திருப்திப்படுத்தும்



முயற்சியில் இந்த அரசாங்கம் ஈடுபட்டது.

கொவிட் - 19 தொற்றினால் உயிரிழப்பவர்களை அடக்கம் செய்வதற்கு உலகில் சிறு பரப்பளவுடைய நாடுகள்கூட அனுமதி வழங்கியபோதும் அதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை.

முஸ்லிம் மக்களின் மத உரிமை மறுக்கப்பட்டதுடன், நம்பிக்கையும் சிதைக்கப்பட்டது. தொழில்நுட்பக்குழு என ஒன்றைக் காரணம் காட்டி தனது குறுகிய அரசியல் நோக்கங்களை ஆளுந்தரப்பு நிறைவேற்றிக்கொண்டது. மக்களின் வலி, வேதனையில்கூட 'அரசியல் சிற்றின்பம்' கண்டனர்.

இந்நிலையிலேயே ஜெனிவாத் தொடரும் ஆரம்பமானது. முஸ்லிம் அமைப்புகள் இவ்விடயத்தை சர்வதேசம் வரை கொண்டு சென்றிருந்தன.

இதனால் சர்வதேச அழுத்தங்களை சமாளிப்பதற்காகவும் முஸ்லிம் நாடுகளின் ஆதரவை பெறுவதற்காகவும் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய முடியும் என்ற அறிவிப்பை பிரதமர் விடுத்தார். பிரதமரின் இந்த அறிவிப்பைக்கூட மொட்டு கட்சி உறுப்பினர்கள் நிராகரித்து அரசியல் செய்தனர்.

இதற்கிடையில் இம்ரான் கான் வந்து சென்ற பிறகு வர்த்தமானி அறிவித்தல் வெளியானது. அத்துடன் இப்பிரச்சினை தீர்ந்துவிடும் என மக்கள் கருதினர்.

ஆனால் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் வலுப்பெற்ற நல் உறவை சீர்குலைக்கும் வகையில் தற்போது 'இடத்தேர்வு' பிரச்சினையை அரசு கிளப்பிவிட்டுள்ளது.

அடக்கம் செய்வதற்கு பல இடங்கள் இருந்தும் அரசியலுக்காக இரணைதீவு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் பகைமையை உருவாக்கும் செயலே இது. எனவே, பொருத்தமான இடங்களில் சடலங்களை அனுமதிப்பதற்கு இடமளிக்க வேண்டும். மாறாக ஒரு இடம் என அறிவித்து, இது விடயத்தில் மேலும் இழுத்தடிப்பு செய்யக்கூடாது" என மேலும் தெரிவித்தார். (நி-4)

## புதிய அரசியல் கட்சிகள் பதிவு செய்ய விண்ணப்பிப்பு

(கொழும்பு)

புதிய அரசியல் கட்சிகளாக பதிவு செய்வதற்கு 35 குழுக்கள் விண்ணப்பித்துள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த விண்ணப்பங்கள் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் குழுவிற்கு அனுப்பப்படும் என ஆணைக்குழுவின் தலைவர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படவுள்ளனர்.

புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்யும் பணிகள் கடந்த ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன், அந்த நடவடிக்கைகள் நேற்று முன்தினத்துடன் முடிவடைந்தன. (நி-4)

## இலங்கையில் முதலீடுகளுக்கு இலங்கை அரசே அனுமதிக்க வேண்டும்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் அறிவிப்பால் தாம் ஆச்சரியம் அடைந்துள்ளதாக கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் சிரேஷ்ட தூதுவர் ஒருவர் இலங்கை அமைச்சரவையின் அறிக்கை தொடர்பில் ஆச்சரியப்படுவதாகக் தெரிவித்தார்.

"இலங்கையில் முதலீடுகளுக்கு இலங்கை அரசாங்கமே அனுமதி அளிக்க வேண்டுமே தவிர உயர்ஸ்தானிகராலயம் அல்ல" என்று அவர் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தை நிர்மாணித்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் மாற்றுவதற்கான திட்டத்தை இந்திய உயர்ஸ்தானிகராலயம் இந்தியாவின் அதானி குழுமத்துடன் தொடர அனுமதி அளித்ததாக இலங்கை நேற்று முன்தினம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் முதல் டோஸ் 76 சதவீத பாதுகாப்பை அளிப்பதாக தெரிவிப்பு

(கொழும்பு)

சுகாதார அதிகாரிகளின் தரவின் அடிப்படையில் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் முதல் டோஸ் ஒரு நபருக்கு கொரோனா வைரஸிலிருந்து 76 சதவீத பாதுகாப்பை அளிக்கிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மருத்துவ சங்கம் ஏற்பாடு செய்திருந்த ஒரு மாநாட்டில் உரையாற்றிய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசகர் நோயெதிர்ப்பு நிபுணர் டாக்டர் தனுஷா தசநாயக்க, அஸ்ட்ராஜெனெகா இரண்டாவது டோஸ் முழுமையாக பாதுகாக்கும் என்றாலும் முதல் டோஸிலிருந்து ஒரு நபருக்கு ஒருவித பாதுகாப்பு இருப்பதை கண்டறிந்துள்ளோம் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் 10-12 வாரங்களில் கொடுக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட பின்னர், காய்ச்சலைக் குறைக்க பெரசிட்டமோல் எடுத்துக்கொள்வது தடுப்பூசியின் தாக்கத்தைக் குறைக்கும் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றும், தனுஷா தசநாயக்க தெரிவித்தார்.

இதற்கிடையில், அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி பாதுகாப்பானது என்று கண்டறியப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சின் ஆலோசகர் தொற்றுநோயியல் நிபுணர் டாக்டர் தீபா கமகே தெரிவித்தார். (நி-4)

## கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டாலும் சுகாதார விதிமுறைகளை பின்பற்ற வேண்டும்

### தொற்று நோயியல் பிரிவு



(கொழும்பு)

கொரோனாத் தடுப்பூசி வழங்கப்பட்டாலும் பொது மக்கள் கண்டிப்பாக சுகாதார வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்று தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் தொற்று நோயியல் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜே விக்ரம இதனை குறிப்பிட்டார்.

கொரோனாத் தடுப்பூசி வழங்கப்பட்டாலும் சுகாதார பழக்கவழக்கங்களை மறந்து விடுவது கடுமையான குற்றமாகும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-4)

## 3 பேருக்கு...

கூடங்களில் நேற்றுப் புதன்கிழமை 381 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன.

அவர்களில் மூன்று பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைத் தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

யாழ்ப்பாணம் சிறைச்சாலை கைதி ஒருவருக்கும் யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து கடந்த வாரம் விடுவிக்கப்பட்ட காரைநகரைச் சேர்ந்த ஒருவருக்கும் ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளி ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் வயாவிளான் தனிமைப்படுத்தல் மையத்தில் இரண்டு பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

(ம-18,33,101,316)

## இராணுவம்...

பேர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று அதிகாலை 4 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

ஓமந்தை சேமமடு காட்டுப்பகுதியில் இருந்து சட்டவிரோத மரங்களை கடத்தி சென்ற கப் ரக வாகனத்தை வீதியில் கடமையில் நின்றிருந்த இராணுவத்தினர் மறித்துள்ளனர்.

எனினும் வாகனம் நிற்காமல் சென்றமையால் துரத்தி சென்றபோது பரநாட்டண்கல் பகுதியில் வாகனத்தை விட்டு தப்பிச் செல்ல முயன்றபோது துப்பாக்கிபிரயோகம் மேற்கொண்டதாக இராணுவத்தின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-299)

## இரணைதீவு...

முப்போரின் சடலங்களை அடக்கம் செய்யும் விவகாரத்தில் தற்போது காணப்படும் நிலைவரங்களை மேலும் குழப்பும் வகையிலேயே அரசாங்கத்தின் இந்தத் தீர்மானம் அமைந்திருக்கிறது.

அதுமாத்திரமன்றி சடலங்களை இரணைதீவில் அடக்கம் செய்ய முடியுமென்றால், நாட்டின் அனைத்துப் பகுதிகளிலுமே அடக்கம் செய்ய முடியும் அல்லவா?

அவ்வாறிருக்கையில் குறிப்பாக அப்பகுதியைத் தெரிவு செய்ததன் காரணமென்ன? இந்த தீர்மானத்தினால் பல்லின சமூகங்களுக்கு இடையில் குழப்பங்கள் ஏற்படக்கூடும் என்றும் தெரிவித்தார். (ம)

## மேலும் ஒருவர்...

ழந்துள்ளார்.

இதற்கமைய நாட்டில் கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 484ஆக உயர்வடைந்துள்ளது. (ம)

## ஆளுநர் செயலக...

வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக ஏ9 பிரதான வீதியை மறித்து நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட அவர்கள் தமது கோரிக்கை தொடர்பில் ஆளுநர் தம்மை சந்திக்காதமையை எதிர்த்தே வீதி மறியல் போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்தனர்.

தமக்கு வழங்கப்பட்ட நிரந்தர நியமனம் இடைநிறுத்தப்பட்ட நிலையில் அதனை மீளப்பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்து வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுகாதார தொண்டர்கள் மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்னாள் மூன்றாவது நாளாக நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-33,101)

## மூன்று பிள்ளை...

இந்தநிலையில், ஒரு பிள்ளையின் சடலம் மீட்கப்பட்ட நிலையில், ஏனைய குழந்தைகளை மீட்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சிறுவர்கள் அணிந்து சென்ற பாதணிகள் மற்றும் தொப்பி என்பன கிணற்றுக்கு அருகில் காணப்படுகின்றன.

கணவருடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே, குறித்த சம்பவம் இடம்பெற்றதாக முதற்கட்டத் தகவல் தெரிவிக்கின்ற போதிலும், மீட்கப்பட்ட பெண் பதில் ஏதும் கூற மறுப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் கீர்த்திகா (வயது-8), அட்சயா (வயது-5), ரெனேஜன் (வயது-2) ஆகிய குழந்தைகளே உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த கிணறு 30 அடி ஆழம்எனக்கூறப்படுவதால்சுழியோடியின்உதவியுடன் குழந்தைகளை மீட்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. (ம-100,315,316)

## இந்திய விசா...

திகதியிலிருந்து மூடப்பட்ட இல. 145, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய விசா சேவைகளுக்கான (IVS) விண்ணப்ப மையமானது 2021 மார்ச் 3ஆம் திகதி முதல் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளதாக இந்திய துணைத் தூதரகம் அறிவித்துள்ளது.

இந்திய விசா சேவைகளுக்கான (IVS) விண்ணப்ப மையத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் முற்பகல் 9.00 மணி முதல் 13.00 மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கோவிட் - 19 பெருந்தொற்றுக் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ள சுற்றுலா விசா தவிர்ந்த ஏனைய அனைத்து வகை விசா விண்ணப்பங்களும் இங்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரர்கள் IVS விண் ணப்ப மையத்தில் பரிந்துரைக்கப்பட்ட கட்டணத்தை செலுத்துவதன் மூலம் தங்களது விசா வழங்கப்பட்ட கடவுச்சீட்டுக்களை (பாஸ்போட்) தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம். (ம-33)

## தீக்காயத்துக்...

இச்சம்பவத்தில் அரியாலை மலர்மகள் வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான ஜெயக்குமார் றஞ்சினி (வயது-47) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பப் பெண் கடந்த 20ஆம் திகதி தனது வீட்டுக்கு முன்னால் உள்ள குப்பைக்கு தீ வைத்துள்ளார்.

இதன்போது எரிந்து கொண்டிருந்த குப்பைக்குள் திடீரென மயங்கி விழுந்ததில் எரி காயங்களுக்கு உள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி குறித்த குடும்பப் பெண் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இவரின் மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-78)

## கொரோ...

தெரிவித்துள்ள சுகாதார சேவை பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத்,

தடுப்பூசியை பயன்படுத்தியதன் காரணமாகவாஅவர்கள் உயிரிழந்தனர் என்பது குறித்து ஆராய்ந்து வருவதாக தெரிவித்துள்ளார்.

இரண்டு நாட்களிற்கு முன்னர் தடுப்பூசியை செலுத்திக் கொண்ட ஒருவர் திவுலுப்பிட்டிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

## தப்பி...

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இலங்கைக்கு எதிராக கொண்டு வந்துள்ள பிரேரணை தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சியின் நிலைப்பாடு தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள்மனித உரிமை பேரவையின் பிரேரணையில் கைச்சாத்திட்டுள்ள இந்த அரசாங்கத்துக்கு, அதிலிருந்து தப்பிச் செல்ல முடியாது. இந்த விடயம் தொடர்பாக முகம்கொடுத்து தீர்த்துக் கொள்ள வேண்டிய பிரச்சினையாகும்.

அத்துடன் இராணுவத்தினரால் அல்லது அதிகாரிகளால் ஏதாவது தவறு ஏற்பட்டிருந்தால், அந்தத் தவறை சரி செய்ய வேண்டும். அதுதான் இடம்பெறவேண்டியது. அந்த தவறை செய்வது இராணுவத்தினராகவோ அரசாங்கமாகவோ அல்ல. மாறாக தனி நபர்களால் ஏற்பட்ட தவறுகளாகவே நாங்கள் அதனைக் கண்டு வந்தோம்.

இராணுவ அதிகாரியோ அல்லது அரச அதிகாரியோ தவறு செய்திருந்தால் அந்த குற்றம் சுமத்தப்படுவது அந்த நபருக்காகும். அவ்வாறில்லாமல் ஒட்டுமொத்தமாக அந்த துறைக்கு அல்ல.

எனவே இந்த தவறான தீர்மானத்தை சரிசெய்ய வேண்டிய பொறுப்பு, ஆரம்பமாக இருப்பது ராஜபக்ஷ அரசாங்கத்துக்காகும் என்றார். (ம)


தன நிதானய
திகதி - 03/03/2021 சீட்டிழுப்பு இலக்கம் - 452
J 09 29 57 66
3 8 8 6

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 03/03/2021 சீட்டிழுப்பு இலக்கம் 1101
4 9 0 9 0 1

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 03.03.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2710
Y 14 17 59 70

மஹஜன சம்பத
திகதி 2021/03/03
சீட்டிழுப்பு இலக்கம் 4415
H 1 0 8 9 5 8

மெகா பவர்
திகதி 03/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0780
C 23 04 42 53 73

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1738 சீட்டிழுப்பு திகதி 03.03.2021
வெற்றி இலக்கங்கள் 10 31 41 66 I
ரூ. 22,528,844
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

சீட்டிழுப்பு வாரம் 057 சீட்டிழுப்பு திகதி 03.03.2021
வெற்றி இலக்கங்கள் 12 33 35
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,613,940/=

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1211 சீட்டிழுப்பு திகதி 03.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 113,727,495
வெற்றி இலக்கங்கள் 02 03 19 24 C

சனிதா
சீட்டிழுப்பு இல: 3541 சீட்டிழுப்பு திகதி 03.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 35,438,271
வெற்றி இலக்கங்கள் 20 23 69 71 P

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,689,014/=
வெற்றி இலக்கங்கள் 03 30 50 51 மிதுனம்
திகதி: 03.03.2021 வெற்றி வாரம்: 3092 வர்ணம்: பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,426,620

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1385 சீட்டிழுப்பு திகதி 03/03/2021
நிறம் மண்ணிறம் தினம் புதன்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் R 15 44 55 57
அடுத்த சுப்பர் ஜக்பொட 72,052,197/=

## காணி விற்பனைக்கு

கொக்குவில், பிரம்படி 2 ஆம் ஒழுங்கையில் 2 1/2 பரப்புக் காணி வெட்டுக்கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. (6011)

**076 702 3565**

## காணி விற்பனைக்கு

யாழ். பிறவுண் வீதி, கல்வாரி சேர்ச் அருகில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (6011)

**076 702 3565**

## வேலை வாய்ப்பு

வடமாகாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனத்திற்கு பணியாளர்கள் தேவை.

- 18-28 வயதுடைய ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- கல்வித்தகைமை : O/L சித்தி, A/L படித்திருத்தல் வேண்டும்.
- அனுபவம் அவசியமற்றது. (6002)

**076 808 2241, 077 766 4474**

யாழ்ப்பாணம்

## காணி விற்பனைக்கு

யாழ். கோப்பாய், நாவலர் பாடசாலைக்கு அருகாமையில் 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

**( 2 புறம்பாகப் பிரிக்கப்பட்ட காணி 14 அடி பாதையுடன் )**

**பருத்தித்துறை வீதியில் இருந்து 40 மீற்றர் நடை தூரம்.**

**( தரகர் தேவையில்லை. )** (6009)

தொடர்பு

**077 596 3845, 076 640 0974**

## சிறுநீரகம் தேவை

O, B குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

தொடர்பு:- (6010)

**076 239 9874**

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம். (6008)

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)


## 3ஆம் ஆண்டு நினைவலைகள்...



அமரர்

திருமதி **ரூபாவதி தயாளன்** (சாந்தி)

( திதி : 04.03.2021 )

மூன்றாண்டு ஆனதம்மா
அன்பு கொண்ட உம் வதனம்
அருகினில் இருப்பது போல்
உணர்கின்றோம் அன்பால் என்றும்!
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
நீங்காது உங்கள்
நினைவு எம் நெஞ்சோடு...

தோற்றம் **18.02.1969** மறைவு **07.03.2018**

" ரூபமஹால் "
வல்லிபுரப்பரியாரியார் ஒழுங்கை,
பருத்தித்துறை. ( 077 652 9017 )

கரையும் கண்ணீரில்
நிறையும் நினைவுகளுடன்
கணவர் இ. தயாளன், மற்றும் பிள்ளைகள்
ராஜன் வீடியோ ஸ்ரூடியோ.
பருத்தித்துறை.

(C-1581)


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ 41 வயது சொந்தமாக தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. (6000)

**(சீதனம் எதிர்பார்க்கவில்லை.)**

Viber & WhatsApp

**077 905 8615**

## வேலை வாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு விற்பனை பிரதிநிதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. (C-1586)

**076 423 0066**

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1546)

0768226240 DHL

## அண்ணா EXPRESS

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/= 070 3305500 077 888 9388 (C-1548)

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்


உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)


# மரண அறிவித்தல்

## திரு. கந்தையா அம்பலவாணர்

(அரசன்)

**( சுப்பிரமணியம் வீதி, இடைப்பிட்டி, காரைநகர். )**



பிறப்பு : 21.02.1939
இறப்பு : 01.03.2021

காரைநகர், இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் டொரொண்டோ, கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திரு. கந்தையா அம்பலவாணர் (அரசன்) கடந்த 01.03.2021 (திங்கட்கிழமை) சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆறுமுகம் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் விமலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், வேலுப்பிள்ளை, வள்ளியம்மை ஆகியோரின் அன்புச் சகோதரனும் கந்தசாமி, சுப்பிரமணியம், அம்பலவாணர், தியாகராஜா, நடராசா, தங்கமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் மனோகரதாஸ் (கனடா), மனோரதி (கனடா), மனோகௌரி (நியூஸிலாந்து), மனோதர்ஷினி (கனடா), மனோபாலன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் புஸ்பவதி, பார்த்திபன், ஜெகன், கிரிஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் நிரோஜன், தேவசேனா கஜந்தன், ஜயனி, சாருகன், சந்தோஷ், அஜீஷ், வெண்பா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**நிகழ்வுகள் :**

| கிரியை | தகனம் |
|---|---|
| Sunday, March 7, 2021<br>From 9.00 a.m to 10.30 a.m | Sunday March 07, 2021<br>at 11.00 a.m |
| Chapel Ridge Funeral Home<br>8911 Woodbine Avenue<br>Markham, ON<br>L3R 5G1 | Highland Hills Crematorium<br>12492 Woodbine Avenue<br>Gormley, ON<br>L0H 1G0 |

**கோவிட் - 19 நெருக்கடி நிலை காரணமாக இறுதி நிகழ்வுகள் குடும்ப உறுப்பினர்களுடனேயே நடைபெறும்.**

நேரடி ஒளிபரப்பு (Live Stream)
https://video.ibm.com/channel/chapelridgefh2

மனோகரதாஸ் (மகன், கனடா) : +1 416-994-7229
மனோரதி (மகள், கனடா) : +1 416-824-4384
மனோகௌரி ( மகள், நியூஸிலாந்து ) : +64 21 208 2319
மனோதர்ஷினி ( மகள், கனடா ) : +1 647-470-8407
மனோபாலன் / கண்ணன் ( மகன், அமெரிக்கா ) : +1 (413) 474-1810
புவி ( பேரமகன், கிளிநொச்சி ) : +94 77 320 5496
தனா ( பேரமகன், கிளிநொச்சி ) : +94 77 071 2402

தகவல் : குடும்பத்தினர்

(6007)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.